★★
Registered as a Newspaper in Ceylon விலை சதம் 10

# ஈழநாடு

THE EELA NADU

தேசிய தினசரி National Tamil Daily
மலர் 7 (12-1-66) இதழ் 334

விசுவாவசு மார்கழி 28 றமழான் பிறை 19 புதன்கிழமை

## திருமதி சாஸ்திரி மூர்ச்சையானர்

புதுடில்லி, ஜன. 11
ஸ்ரீலால்பகதூர் சாஸ்திரியின் திடீர் மரணச் செய்தி அதிகாலையில் திருமதி சாஸ்திரியிடம் தெரிவிக்கப்பட்டதும் அவர் அதிர்ச்சியடைந்து மூர்ச்சையானர். பின்னர் அவருக்கு ஊசிமருந்து ஏற்றி நித்திரையாக்கினர்கள். சாஸ்திரியின் மூன்று புதல்விகளும், இரு புதல்வர்களும் சாஸ்திரியின் 90 வயதான தாயாரும் மரணச்செய்தி கேட்டு அதிர்ச்சி யடைந்ததுடன் செயலற்று திக்பிரமை யடைந்தனர். தாயார், தனது மகன் மறைந்துவிட்டாரென்ற செய்தியைக் கடைசிவரை நம்பவேயில்லை. ''செவ்வாய்க்கிழமை புறப்பட்டு புதன்கிழமை புதுடில்லி வருவேன்'' என்று டெலிபோனில் கூறிய சிலமணி நேரத்தில் அவர் இறந்துவிட்டாரென்ற செய்தி கிடைத்தசென்ருல் யார்தான் நம்புவர்.

# தமிழ்மொழி மசோதா இனிதே நிறைவேறியது

## ஆதரித்து 96 பேரும் எதிர்த்து 53பேரும்வாக்களித்தனர்

### செனட் சபையிலும் (18--7) சுமுகமாக நிறைவேற்றப்பட்டது

கொழும்பு, செவ்.

**தமிழ்மொழி (விசேஷ) சட்டவிதிகள் மசோதா, ஜனப்பிரதிநிதிகள் சபையிலும் செனட் சபையிலும் பலத்த மகிழ்ச்சி ஆரவாரங்களுக்கிடையே இன்று நிறைவேறியது.**

**ஜனப்பிரதிநிதிகள்சபையில் இம்மசோதாமீது வாக்கெடுப்பு நடைபெற்ற பொழுது 96 பேர் சாதகமாகவும் 53பேர் பாதகமாகவும் வாக்களித்தனர். திரு.ஏ எல். ஏ. மஜீத்தும், திரு. எம் எஸ் காரியப்பரும் பார்லிமெண்டுக்கு சமுகமளிக்கவில்லை.**

**செனட்சபையில்வாக்கெடுப்பு நடைபெற்றபொழுது 18பேர் ஆதரித்தும் 7 பேர் எதிர்த்தும் வாக்களித்தனர்.**

தமிழ் மொழி (விசேஷ) சட்டவிதிகள் மசோதாமீது பிரதமர் திரு. டட்லிசேனநாயக்கா பேசிமுடிந்ததும் பிற்பகல் 4-30மணிக்கு வாக்கெடுப்பு நடைபெற்றது.

எதிர்க்கட்சி அங்கத்தவர் திரு. பீலிக்ஸ் டயஸ் பண்டாரநாயகா நீண்ட நேரம் பேசியதால் மற்றவர்கள் பேசுவதற்கு நேரம் போதாதென்று சபாநாயகர் அறிவித்திருந்ததைத் தொடர்ந்து சில தமிழ் எம்.பி.க்கள் உட்பட பல அங்கத்தவர்கள் இன்று பேசுவதற்கு அனுமதிக்கப்படவில்லை.

**''எப்படியும அழையுங்கள்''**

பிரதமர் திரு. டட்லி சேனநாயக்கா தமது சுருக்கமான உரையில்; தம்மீது குற்றம் காண்பவர்கள் தம்மை எப்படி வேண்டுமானலும் அழைக்கலாமென்று கூறினர்.

''உத்தியோகமொழிச்சட்டத்தில் ஒரு பகுதிகூட நாங்கள் திருத்தவில்லை. திருத்தபடவும் மாட்டாது. மொழி விஷயத்தில் எவரும் கலக்கமடைந்து குழப்பம் விளைவிக்கத்தேவையில்லை. எல்லாம் நாட்டின் நன்மைக்காகவே செய்யப்பட்டிருக்கிறது. இதன்நன்மைகள் உடனடியாகத் தெரியவராவிடினும் காலம் இதற்கு நிச்சயம் பதில் சொல்லும்'' என்றும் பிரதமர் கூறினர்.

மாவட்டசபைகள் பற்றி பிரதமர் குறிப்பிடுகையில்; மாவட்டசபைகள் நிறுவப்படும் என்றும் இவை மத்திய அரசாங்கத்தின் கட்டுப்பாட்டின் கீழிருக்குமென்றும் கூறினர்.

**வாக்கெடுப்பு**

தமிழ் மொழி (விசேஷ) சட்டவிதிகள் மசோதாவின் ஷரத்துகள் தனியாகவும், பின்னர் ஷரத்துக்களுடன் மசோதாவும் சேர்த்தும் வாக்கெடுப்புக்கு விடப்பட்டன. வாக்கெடுப்பில் 96 பேர் சாதகமாகவும் 53பேர் பாதகமாகவும் வாக்களித்தி

(6-ம் பக்கம் பார்க்க)

# இரு எம்.பி.க்கள் வெளியேற்றப்பட்டனர்

### சபாநாயகர் உத்தரவு; பொலிஸார் நடவடிக்கை

கொழும்பு, செவ்.

**பார்லிமெண்டில் சபாநாயகரின் கட்டளைக்கு கட்டுபட மறுத்தஇரண்டு எம். பி.க்கள் இன்று ஜனப்பிரதிநிதிகள்சபையிலிருந்து பொலிஸாரினுல் வெளியேற்றப்பட்டனர்.**

பிரதமர் டட்லி சேனநாயக்கா பேசி முடிந்ததும் தாம் பேசுவதற்கு அனுமதி தரும்படி ஹபரடுவ எம்.பி திரு. பிறின்ஸ் குணசேகரா (சுயேச்சை) சபாநாயகரை கேட்டுக் கொண்டார். ஆனல் நேரம் போதாத காரணத்தினுல் பேசுவதற்கு அனுமதிக்க முடியாது என்று சபாநாயகர் பதிலளித்தார்.

குணசேகரா: என்னைக் கொஞ்சம் பேசவிடுங்கள்.

சபாநாயகர்: நேரம் போதாது. மற்றவர்களுக்கும் நான் அனுமதி வழங்கவில்லை.

குணசேகரா: நான் பேசத்தான் வேண்டும்.

சபாநாயகர்: முடியாது. கட்டுப்பாட்டுடன் நடந்து கொள்ளுங்கள்.

குணசேகரா: ''சிங்கள மக்களின் குரலைக் கேளுங்கள்''

இதனைத் தொடர்ந்து பிறின்ஸ் குணசேகராவை வெளியே கொண்டு போகும்படி சபைக் காவலருக்கு சபாநாயகர் உத்தரவிட்டார்.

சபைக் காவலர்கள் திரு. குணசேகராவை அணுகி, வெளியே போகும்ப கேட்டுக் கொண்டார். ஆனல் அ-வர் மறுக்கவே பொலிஸார் அழைக்கப்பட்டனர். அதன்பின்னர், ஒரு சப் இன்ஸ்பெக்டரும் நான்கு பொலிஸ் கான்ஸ்டபிள்களும் திரு. குணசேகராவை சபையிலிருந்து தூக்கிச் சென்று பார்லிமெண்டுக்கு முன்பாகவுள்ள காலிமுக வீதியில் விட்டனர்.

சில நிமிடங்களுக்குப் பின்னர், கெஸ்பவ எம். பி. திரு. சோமவீர சந்திரசிறி (சுதந்திரா) தாம் பேசுவதற்கு அனுமதி தரும்படி சபாநாயகரைக் கேட்டுக் கொண்டார். அவருக்கும் சபாநாயகர் அனுமதி கொடுக்க மறுத்தார். திரு சந்திரசிறி பின்னர் சபாநாயகருக்கு எதிராக நடந்து கொள்ளவே அவரையும் வெளியேற்றும்படி சபைக் காவலர்களுக்கு சபாநாயகர் உத்தரவு வழங்கினர். சபைக் காவலர் திரு. சந்திரசிறியிடம் வெளியேறுமாறு கேட்டுக் கொண்டனர். ஆனல் அவர் மறுத்து விட்டார். இதனைத் தொடர்ந்து பொலிஸார் அழைக்கப்பட்டு அவரை அப்புறப் படுத்தினர்.

ஒரு கட்டத்தில் சபாநாயகருக்கும் எதிர்க் கட்சியினருக்குமிடையே காரசாரமான விவாதம் நடைபெற்றது.

என். எம்: பொலிஸார் சபைக்குள் பிரவேசித்து எம். பிக்களை தூக்கிச் செல்வது இதுவே முதற்தடவை.

சபாநாயகர்: முதற் தடவையோ, கடைசித் தடவையோ அதுபற்றி பரவா

(6-ம் பக்கம் பார்க்க)

# சாஸ்திரி பூதவுடல் இன்று தகனம்

### வெளிநாட்டு தலைவர்கள் பலரும் நேரில் அஞ்சலி செலுத்தினர்

புதுடில்லி, ஜன. 12

**மறைந்து**போன இந்தியப் பிரதமர் திரு. லால்பகதூர் சாஸ்திரிக்கு தங்களது இறுதி அஞ்சலியைச் செலுத்தும் பொருட்டு பல்லாயிரக்கணக்கானமக்கள் 'கியூ' வரிசையில் அவரது இல்லத்துக்குச்சென்றுகொண்டிருந்தனர். சாஸ்திரியின் பூதவுடல் அவரது இல்லத்தின் முன் வாயிலில் அமைக்கப்பட்டிருக்கும் மேடைமீது வைக்கப்பட்டிருக்கிறது. இந்தியாவின் மூவர்ணக்கொடி பூதவுடலை மறைத்திருக்கிறது. மலர்களும் மலர்வளையங்களும் நாற்புறங்களிலும் குவிந்துகிடக்கின்றன. இறுதி ஊர்வலம் இன்று புதன்கிழமை காலை ஒன்பது முப்பதுக்கு சாந்தி பவனத்துக்கு ஆரம்பமாகி இன்றுபகல் [illegible] நடைபெறும்.

(6-ம் பக்கம் பார்க்க)

# சாஸ்திரியின் மறைவு: டட்லி அனுதாபம்

கொழும்பு, செவ்

இந்தியப் பிரதமர் திரு. லால்பகதூர்சாஸ்திரியின் அகால மரணம் பற்றிய செய்தி தமக்கு அதிர்ச்சியைக் கொடுத்துள்ளதாக இலங்கைப் பிரதமர் திரு. டட்லி சேனநாயக்கா, இந்தியப் பிரதமர் திரு. குல்ஸாரிலால்நந்தாவுக்கு இன்று அனுப்பிய அனுதாபச் செய்தியில் தெரிவித்துள்ளார்.

மறைந்த தலைவருக்கு இலங்கை மக்களின் சார்பில் அனுதாபந் தெரிவித்த திரு. டட்லி சேனநாயக்கா ,பாரத மக்களின் கவலையில் நானும் இலங்கை மக்களும் உளம் நெகிழ்ந்து பங்கு கொள்கிறேம்' என்று தெரிவித்துள்ளார்.

மறைந்த இந்தியப் பிரதருக்கு அஞ்சலி செலுத்துமுகமாக இலங்கையில் சகல அரசாங்க காரியாலயங்களிலும் தேசீயக் கொடிகள் அரைக்கம்பத்தில் பறக்கவிடப்பட்டுள்ளன.

திரு. லால்பகதூர் சாஸ்திரியின் மரணச் செய்தி கேட்டதும் யாழ்ப்பாணத்திலும் இதர இடங்கள் பலவற்றிலும் கறுப்புக் கொடிகள் தொங்கவிடப்பட்டன.

இந்திய வர்த்தகர் கள் நாளை தங்களது கடைகளை மூடுவர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அறிவித்தல்

பொங்கல் பண்டிகையை முன்னிட்டு 'ஈழநாடு' காரியாலயத்துக்கு (14-1-1966) வெள்ளிக்கிழமை விடுமுறையாதலால் (15-1-1966) சனிக்கிழமை மட்டும் 'ஈழநாடு' வெளிவரமாட்டாது.

### மணிவாக்கு

நியாயமே வலிமை என்ற உறுதி நமக்கு இருக்கவேண்டும்; அந்த உறுதியோடு நாம் நமக்குத் தெரிந்தபடி நமது கடமையை இறுதிவரை துணிந்து செய்வோம். —ஆபிரகாம்லிங்கன்


# ஈழநாடு

EELA NADU: National Tamil Daily Post Box 49, JAFFNA
Telegrams: EELA NADU Jaffna. Phone: 389

விசுவாவசு மார்கழி 28 உ (12-1-66)


## சாஸ்திரியின் மறைவு

ஸ்ரீ லால்பகதூர் சாஸ்திரியின் மரணச் செய்தி, உலகம் எதிர்பார்த்திராத அந்தத் துயரச் செய்தி, குறிப்பாக இந்திய மக்களுக்கும் பொதுவாக உலக மக்களுக்கும் பேரிடிபோல் விழுந்திருக்கிறது. உலக சமாதானத் தூதர், ஆசிய ஜோதி ஜவஹர்லால் நேருவை இழந்த துயரம் நீங்குவதற்கு முன்பாகவே, அவர் வழியில் இந்திய மக்களின் ஐக்கியத்துக்கும் உலக சமாதானத்துக்கும் பணிபுரிந்த லால்பகதூர்சாஸ்திரி சமாதானப் பணியிலேயே உயிர் நீத்தது இடிக்குமேல் இடி விழுந்த சோகக் கதையாகிவிட்டது.

நேருவுக்குப்பின் இந்தியா எப்படி இருக்குமோ என்ன ஆகுமோ என்று இந்திய மக்களே கவலையடைந்திருந்த சமயத்தில் இந்தியாவின் ஆட்சிப் பொறுப்பை, நேருவின்பின் ஏற்று இந்திய மக்களின் கவலையைப் போக்கியவர் ஸ்ரீ சாஸ்திரி. ஆட்சிப் பொறுப்பை ஏற்றுப் பதினெட்டு மாதங்கள்தான். அதற்குள் அவரையும் இந்தியாவையும் சூழ்ந்துகொண்ட சோதனைகள் கொஞ்சமல்ல. வெளித் தாக்குதல்கள், வெளியாரின் மிரட்டல்கள், உள்நாட்டில் தோன்றிய அரசியல் நெருக்கடிகள், மொழிக் கிளர்ச்சிகள், உணவு நெருக்கடி, பொருளாதாரப் பிரச்னை இப்படிப் பல. இத்தனை சங்கடங்களையும் சாஸ்திரிக்கே உரித்தான அமைதியுடனும் உள்ள உறுதியுடனும் சிறிதும் சளைக்காமல் தீர்வுகண்டார். எந்தப்பிரச்னையையும் அமைதி வழியில், சமாதானப் பேச்சுவார்த்தைகள் மூலம் தீர்க்க முடியுமென்பதுதான் காந்திஜியும் நேருஜியும் கண்ட வழி. அதே வழியையே சாஸ்திரியும் பின்பற்றினர். அதில் வெற்றியும் கண்டார். அமைதி வழிதான் அவர் வழி. ஆனாலும் ஆக்கிரமிப்புக்கு அவர் அடிபணிய மறுத்தார். உருவத்தில் சிறியவர்தான். ஆனால் உறுதி கொண்ட நெஞ்சமுள்ளவர். பார்வைக்கு நோஞ்சான்; ஆனால் நேர்மையுடையவர். பாகிஸ்தானுக்கும் இந்தியாவுக்குமிடையில் சண்டை மூண்டபொழுது அவர் காட்டியஉறுதியும், பாகிஸ்தானுடன் தகராறு ஏற்பட்டிருந்த அதேசமயம் வடகிழக்கு எல்லையில் சீனுவின் மிரட்டல் தோன்றியபோது, "திருப்பி அடிப்போம், தயங்கமாட்டோம்" என்று அவர் கொடுத்த பதில்மூர்த்தி சிறிதானுலும்கீர்த்தி பெரிது என்ற பழமொழியை உண்மையாக்கியது.

உள்நாட்டில் கேரளத்தில் அரசியல் நெருக்கடி தோன்றினுலும், காஷ்மீரில் பிரச்னை தோன்றினுலும் அவற்றை நேரு காலத்திலேயே அமைதி வழியில் தீர்த்துவைத்தவர் லால்பகதூர் சாஸ்திரி. நேபாளத்துக்கும் இந்தியாவுக்கும் உள்ள உறவில் சீர்குலைவு தோன்றியபோதும், பர்மாவுடனுள்ள தொடர்பு குறைந்தபோதிலும், அவற்றுக்கும் வைத்தியம் பார்த்து நோய்தீர்த்தவர் லால்பகதூர். இந்தியாவுக்கும் இலங்கைக்கும் இடையில் தீராத பிரச்னையாக இருந்துவந்த 'நாடற்றவர்' பிரச்னைக்கும் தீர்வுகண்டவர் லால்பகதூர். உள்நாட்டில் தேசிய ஐக்கியத்தையும் அயல்நாடுகளுடன் நட்புறவையும் உலகில் சமாதானத்தையும் நிலைநாட்ட உழைத்தவர் அவர்.

இந்தியாவுக்கும் பாகிஸ்தானுக்கும் இடையில் உள்ள தகராறுகளுக்குச் சமரசத் தீர்வுகண்டு இந்திய உபகண்டத்திலும் ஆசியாவிலும் ஏன், உலக முழுவதிலுமே அமைதியை நிலைநாட்டத் துடிதுடித்த லால்பகதூர், ஆயிரக்கணக்கான மைல்களுக்கு அப்பாலுள்ள சோவியத் நாட்டில் தாஷ்கண்ட் நகரத்தில் தனது சமாதானப் பணியை நிறைவேற்றி உலகம் உள்ளளவும் நினைவில் நிற்கக்கூடிய தாஷ்கண்ட் பிரகடனத்தில் கையெழுத்திட்டபின் கண்ணைமூடியது, அவரது பணி இத்துடன் முடிவடைந்துவிட்டதென அவர் எண்ணியதுதானே? போரிலும் வீரர், சமாதானத்திலும் வீரர். அந்த வீரருக்கு உலகம் இன்று தலைவணங்குகிறது. தலைவணங்காதவர்கள் என்று சொல்லப்படும் சோவியத்நாட்டின் தலைவர்களில் ஒருவரான சோவியத் பிரதமர் கொஸிஜின் சிரம்தாழ்த்தி அஞ்சலி செய்ததே சான்று.

அமைதியின் அவதாரமான காந்திஜியின் சீடர் லால்பகதூர் சாஸ்திரி சமாதான வீரராக தாய்நாடு திரும்பவேண்டிய சமயத்தில் அவருக்கு வீரவரவேற்பு அளிக்கவிருந்த பாரதநாட்டின் கோடானுகோடி மக்கள் அவரது பூதவுடலை வரவேற்பதென்ருல்... ஐயையோ, அவர்கள் நிலையை எப்படிச் சொல்வது.

காந்திஜி பிறந்த அக்டோபர் 2-ம்திகதி பிறந்த லால்பகதூர், காந்திஜி மறைந்த தியாகப்பிரம்மத்தின் ஆராதனை தினத்திலேயே மறைந்திருக்கிருர். லால்பகதூர் வெறும் மனிதரல்லர். தியாகி, தியாகபுருஷர்; அவதாரபுருஷரும் கூட. அவர் மறைந்துவிட்டாலும் அவர் காட்டிய உறுதியும் உழைப்பும் சமாதானப் பணியும் இந்திய மக்களுக்கு மட்டுமல்ல உலக முழுவதற்குமே நிலைத்து நின்று வழிகாட்டும்.

## நேருவைத் தொடர்ந்திட்டாயே

— இ. நாகராஜன்

நேருஜி இல்லை யென்றே
    நெஞ்செலாம் உருகிச் சோர்ந்த
பாரத தேசத் துக்குப்
    பலமென நின்றே காந்திச்
சீரதைத் தெரிந்து, வீரச்
    சிந்தையும் செயலும் ஆற்றி
கூரிய மதியே கொண்ட
    குவலயத் தலைவ னனாய்!

உருவிலே சிறியோய், உள்ளத்
    துறுதியில் பெரியோய், நாட்டை
அருளிலே நடத்தித், தாக்கும்
    ஆணவத் திமிரை ஓட்டி
மருளுறு மனத்தார்க் கெல்லாம்
    மாண்பினை உணர்த்தி வைத்த
பொருளுறு பண்பே இன்று
    போயினை புவனம் விட்டே.

சாதிகள் சமயம் என்ற
    சஞ்சலக் கொள்கை நீக்கி
நீதியே குறியாய் இந்த
    நீனுல கத்தில் என்றும்
ஏதமில் சமத்து வத்தின்
    இனிமையே காண வென்றே
ஓதரும் பாடு பட்ட
    உத்தம ரன்றோ நீவிர்.

பாரதம் கண்ட பண்பின்
    பக்குவத் தலைவர் கட்குள்
நேருஜி என்ற தீரர்
    நீணிலத் தொளியே ஆகி
பேரிருள் கடிந்தார் அந்தப்
    பெருமையே பிசகா வாறு
கூரிய மதியி னேடு
    குவலயம் போற்ற வாழ்ந்தாய்.

இன்றுநீ இல்லை; ஆனுல்
    இங்குள மக்கள் உள்ளம்
சென்றுநீ அழிந்தி டாதே
    சீருடன் வாழ்வாய் ஞானக்
குன்றமே! உனது பண்பின்
    குறியுடன் எதிர்கா லத்தே
சென்றிடும் பார தத்தின்
    சீரினில் ஒளிர்வாய் என்றும்.

பேரியல் அறிவு இந்தப்
    பெருநிலம் மதிக்க என்றும்
கூரியல் ஞானம் கொண்டு
    குணத்தினுல் உயர்ந்த எங்கள்
சீரியல் நேரு வாகித்
    திகழ்ந்தநீ அதையே காட்ட
நேரியல் நின்றே இன்று
    நேருவைத் தொடர்ந்திட் டாயே!

## சிங்கள இனத்துக்காக பதவிதுறந்தேன்

### பார்லிமெண்டில் திருமதி ராஜரத்தினு

பம்பலப்பிட்டி, செவ்வாய்

புதிய சட்டவிதிகள் நிறைவேற்றப்பட்டால் சிங்கள இனமும் சிங்கள மொழியும் இறந்துவிடுமென்றும் இதனுலேயே தாம் இதை எதிர்ப்பதாகவும் திருமதி குசுமா ராஜரத்தினு தெரிவித்தார்.

ஜனப்பிரதிநிதிகள் சபையில் தமிழ்மொழிச் சட்ட (விசேஷ) விதிகள் மசோதாமீது நடைபெற்ற விவாதத்தின்போது பேசுகையிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

திருமதி குசுமா ராஜரத்தினு மேலும் பேசுகையில் கூறியதாவது:

'வடக்கு - கிழக்கு மாகாணங்களில் சிங்களத்திலும், தமிழிலும், ஆங்கிலத்திலும் எவ்வாறு வேலைகளை நடத்த பிரதமர் உத்தேசித்துள்ளார் என்பதை நான் அறிய விரும்புகின்றேன்.

புதிய சட்டவிதிகள் தமிழ் மூலமாக அரசாங்கசேவையில் சேர்ந்த ஒரு அரசாங்க ஊழியருக்கு சிங்களம் தெரிந்திருக்கத் தேவையில்லையெனக் கூறுகிறது. எனவே அரசாங்கம் சிங்கள மொழி பெயர்ப்பாளர்களை வடக்கு - கிழக்கு மாகாணங்களில் நியமிக்கவேண்டிவரும். இதனை பிரதமர் எவ்வாறு செய்ய உத்தேசித்துள்ளார் என நான் கேட்க விரும்புகின்றேன். இது செயல்படுத்த முடியாது என நான் தெரிவிக்க விரும்புகின்றேன். வடக்கு - கிழக்கு மாகாணங்களிலுள்ள 98 சதவீதமான அரசாங்க சேவை ஊழியர்கள் தமிழர்கள். இவர்களுக்குச்சிங்களம் தெரியாது. புதிய சட்டவிதிகளின்படி வடக்கு - கிழக்கு மாகாணல்களில் தமிழிலேயே வேலை நடைபெறும். சிறிதான வேலை ஆங்கிலத்திலும் நடைபெறும். இப்புதிய சட்டவிதிகளின்படி வடக்கு - கிழக்கு மாகாணங்களில் சிங்களவர் வாழ முடியாத நிலை ஏற்படும். தமிழைக் கற்பதால் மட்டுமே அவர்கள் அங்கு வாழக் கூடியதாக இருக்கும். வடக்கு - கிழக்கு மாகாணங்களைசட்டபூர்வமான தமிழ்ப் பிரதேசங்களாக மாற்ற இந்த புதிய சட்டவிதிகள் வகை செய்யும்'.

---

"ஈழநாடு"

## சூருவளி மாத உதவித் திட்டம்

யாழ்ப்பாணம், புதன்

'ஈழநாடு' சூருவளி மாத உதவித் திட்டத்தின் கீழ் நெல்லியடியைச் சேர்ந்த ஒன்பர் தமது தைமாதத்துக்கான உதவியை (ரூ. 25) அனுப்பியுள்ளார்.

## சமாதான சாஸ்திரி

'சமாதான ஒப்பந்தம் ஏற்படுத்திவிட்டோம்' மறைந்த உத்தமரின் இறுதிவார்த்தை இதுவாம்கேட்கவேநெஞ்சம் வேகிறது. எழுதமுடியாதபடி கைகள் நடுங்குகின்றன. எழுதும் காகிதங்கள் நனைந்து நனைந்து கரைகின்றன. அவைகளுக்கும் இதயம் இருக்கிறதுபோலும்.

எத்தனையோ அப்பாவி உயிர்களை வீணுகப்பலியிடக்கூடாது. சமாதானத்தினுல் ஓர்உயிருக்குமே வீணுனதீங்கு ஏற்படுத்தப்படா என்றநம்பிக்கையில் அந்த உறுதியில் ரஷ்யப் பிரதமரின் அழைப்பைஏற்று அயல் நாடுகளின் ஒற்றுமை வலுப்பட யார் அழைத்தாலும் அதனை ஏற்றுக்கொள்வேன் என்று சொல்லி அங்கு சென்று தனது இலட்சியத்தை-அந்த உயர்ந்த சமாதான ஒப்பந்தத்தை ஏற்படுத்திவிட்டு கடமை முடிந்ததும் மறைந்துவிட்டார், அந்த மாபெரும் தலைவர் சாஸ்திரி.

ஒன்றரை வருடகால ஆட்சியில் பாரதநாட்டின் ஒற்றுமைக்கும், சமாதானத்துக்கும் தன் உடல் நிலையைக்கூட பொருட்படுத்தாமல் தான் உயிராகப்போற்றிய மக்களின் உயிர்வாழ்வுக்காக உழைத்த உத்தமர் புன்னகைபூத்த முகத்துடன் சமாதான ஒப்புந்தம்செய்து விட்டுபோய்விட்டார். வெற்றியுடன் வீடு திரும்பும் வீரனுக்கு வரவேற்பு ஏற்பாடுகளுக்காகக் காத்திருந்த வீட்டில்......... பாரத நாட்டில் நெஞ்சை வேகவைக்கும் அந்தத்துயரச் செய்தி... எதிர்பார்த்திருக்கவே முடியாத எதிர்பாராத அந்தச் செய்தி என்னபாடு படுத்துமோ. அதை எப்படிக்கூறுவது? தூங்கி விழிக்குமுன் இத்தனைபெரிய இடி, அந்தப் பாரதமக்களின் தலையில்விழவேண்டுமா? எங்கோ இருக்கும் எமது நெஞ்சங்களெல்லாம்வெந்துமாய்ந்து கொண்டு விம்மி, விம்மி சாம்பி அழும்போது அவர்கள் நிலை என்ன? கடவுளே, சமாதானத்துக்காக உழைப்பவர்கள் அதிக நாட்கள் வாழக்கூடாதா? இல்லை அவர்கள் உன்திருவடியை விரைவில் சேர்ந்துவிடுகிருர்களா?

--கணேஷ்

---

ஆசிரியருக்குக் கடிதம்

### "யாரையும் வெறுக்காதீர்கள் யாருக்கும் அஞ்சாதீர்கள்"

இம்மாதம் 7-ந் திகதி 'ஈழநாடு' பத்திரிகையில் எழுதப்பட்டிருந்த் ஆசிரியத் தலையங்கம் மிகவும் சிறந்தாக விளங்கியது. அத்தலையங்கம், தமிழ் பேசும் மக்களின் நிலைபற்றி சரியாக எடுத்துரைத்து தக்கபடி புத்திபுகட்டியிருக்கிறது. தலையங்கத்தில் குறிப்பிட்ட ராஜதந்திரம் மிகுந்த அந்த ஆலோசனைப்படி எதிர்காலத்தில் தமிழ் மக்கள் ஒன்றுபட்டு செயலாற்றுவார்களானுல் அவர்களது மொழியும், கலாச்சாரமும் குறிப்பிட்ட அளவுக்கு முன்னேற்றமடைவதுடன், அவர்களது மொழி உரிமையையும் பெறமுடியும்.

மிகவும் இக்கட்டான நிலையில் இந்திய மக்களுக்கு மகாத்மா காந்தி பின்வருமாறு ஆலோசனை கூறியிருந்தார்:-

"யாரையும் வெறுக்காதீர்கள், யாருக்கும் அஞ்சாதீர்கள்" மகாத்மாவின் இந்த ஆலோசனை தமிழர்களுக்கு இந்த நெருக்கடி நேரத்தில் பெரும் உதவியாகவிருக்கும்.

எஸ். சிவசுப்பிரமணியம்
கொழும்பு.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# லால் பகதூர் சாஸ்திரி வாழ்க்கைவரலாறும் அவரது அரும்பணிகளும்

திரு. லால்பகதூர் சாஸ்திரி 1904-ம் ஆண்டு அக்டோபர் 2-ம் திகதி உத்தர பிரதேசத்திலுள்ள மொகல் சராயில் பிறந்தார். காந்திஜி பிறந்ததினமும் அக்டோபர் 2-ம் திகதியாகும்.

சாஸ்திரி ஒன்றரை வயதுப் பையனாய் இருக்கும்போதே பள்ளிக்கூட ஆசிரியராக இருந்த அவரது தந்தை காலமானார். இதன்பின் அவர் தாய் வழிப்பாட்டனிடம் வளர்ந்தார்.

வாரணாசியில் கல்விகற்றபோது, 1914-ம் ஆண்டு ஆச்சார்யா நரேந்திரதேவைச் சந்தித்து, பள்ளிக்கூடங்களை பகிஷ்கரிக்கும்படி கோரினார். இதனால் கைதாகி சிறைத்தண்டனை அனுபவித்தபின் விடுதலையானார். அதன்பின்பு காசி பல்கலைக்கழகத்தில் சேர்ந்தார். மாதம் இரண்டரை ரூபாய் செலவில் ஏழை மாணவராக அவர் அப்போது வாழ்க்கை நடத்தினார் என்பது குறிப்பிடத்தக்கது.

திரு. லால்பகதூர் தத்துவ சாஸ்திரத்தில் சாஸ்திரி என்ற பட்டத்தைப் பெற்றபின், சாஸ்திரி என்ற பெயரே அவருக்கு நிலைத்துவிட்டது.

அவர் சிறந்த ஒரு நீச்சல்காரர். ஒருமுறை பள்ளிக்கூடம் செல்ல படகுக்காரனுக்குக் கொடுக்கப் பணம் இல்லாமல் கங்கையை நீந்திக் கடந்தார்.

சாஸ்திரி குடும்பம் பிற்காலத்தில் அலகாபாத்தில் குடியேறியது. திரு. சாஸ்திரி அங்கு முனிசிபல்சபைக்கு அங்கத்தினராகத் தெரிவுசெய்யப்பட்டார்.

23 வயதில் திரு. சாஸ்திரிக்கு திருமணம் நடைபெற்றது. அதன்பின் லாலாலஜபதிராயின் மக்கள் ஊழியர் ஸ்தாபனத்தில் திரு. சாஸ்திரி ஆயுட்கால அங்கத்தினராகச் சேர்ந்தார்.

திரு. சாஸ்திரி நேரு மந்திரிசபையில் உள்துறை மந்திரியாகவும், போக்குவரத்து மந்திரியாகவும் பதவி வகித்தார். தெற்கே அரியலூரில் நடைபெற்ற ரயில்விபத்தைத் தொடர்ந்து ராஜினாமா செய்தார். நேரடியாக அவருக்கு இவ்விஷயத்தில் சம்பந்தமில்லாதபோதிலும், அரசியலமைப்புப்படி தானே குறிப்பிட்ட இலாகாவுக்குப் பொறுப்பு எனக் கூறி ராஜினாமாச் செய்தார்.

தேர்தலின்போது 3000 காங்கிரஸ் அபேட்சகர்களைத் தெரிவு செய்யும் பொறுப்பு திரு. சாஸ்தரியிடம் ஒப்படைக்கப்பட்டது.

திரு. சாஸ்திரி பல்வேறு சிரமதான கருத்து வேறுபாடுகளை அகற்றுவதில் நேரம் முழுவதும் செலவிட்டு வந்தார்.

பேச்சுவார்த்தை நடத்துவதில், விஷயங்களைக் கையாள்வதில் அவர் பெரிய கெட்டிக்காரர் அஸ்ஸாமில் மொழிக்கிளர்ச்சி, தென்னாட்டில் ஹிந்தி எதிர்ப்பு, சீக்கியர்கள் பாரபட்சமாக நடத்தப்படுவதாக ஏற்பட்ட கிளர்ச்சி, காஷ்மீரில் புனிதகேசம் மறைந்தபோது ஏற்பட்ட கொந்தளிப்பு ஆகியவற்றைத் தீர்த்தவர் அவரே

மற்றும் இலங்கை, பர்மா ஆகிய நாடுகளுடனான பிரச்னையைத் தீர்க்க முயன்றிருப்பதுடன்காமன்வெல்த் பிரதமர்கள் மகாநாடு உட்பட அவர் பங்குபற்றிய சர்வதேச மகாநாடுகளிலும் உருவான ஆக்க பணியாற்றியிருக்கிறார். கடைசியாக அவர் டாஷ்கண்டில் வெற்றிகரமான பிரகடனத்தை திரு. அயூபுடன் சேர்ந்து உருவாக்கினார்.



## யாழ். மேயரின் அனுதாபச் செய்தி

யாழ்ப்பாணம், புதன்

இந்தியப் பிரதமர் திரு. சாஸ்திரி திடீரென மரணமான செய்திகேட்டு மிகவும் அதிர்ச்சியும் துக்கமும் அடைந்ததாக யாழ்ப்பாண மேயர் திரு. எஸ் நாகராசா தெரிவித்துள்ளார்.

இலங்கையிலுள்ள இந்திய ஹைகமிஷனுக்கு அவர் அனுப்பிவைத்துள்ள அனுதாபச் செய்தியில் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

திரு. சாஸ்திரிசமாதானப் பணியில் ஈடுபட்டுக்கொண்டிருந்த சமயத்தில் காலமானது மிகவும் வேதனையைத் தருகிறது. யாழ்ப்பாணத்து மக்களின் ஆழ்ந்த அனுதாபத்தை திருமதி சாஸ்திரிக்கும் இந்திய அரசாங்கத்துக்கும் தெரிவிக்கும்படி கேட்டுக்கொள்ளுகின்றேன்

## யாழ். மாநகரசபை கூட்டம்

யாழ்ப்பாணம், புதன்

யாழ். மாநகரசபையின் மாதாந்தக்கூட்ட இம்மாதம் 17-ந் திகதி மாலை மாநகரசபை மன்றத்தில் மேயர் திரு. சி. நாகராசா தலைமையில் நடைபெறவிருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

## சேவைநலம் பாராட்டு

யாழ்ப்பாணம், புதன்

கரவெட்டி மேற்கு மெதடிஸ்தமிஷன் பாடசாலையில் தலைமைஆசிரியராக கடந்த 30 வருட காலமாகச்சேவையாற்றி இம்மாதத்திலிருந்து சேவையிலிருந்து இளைப்பாறும் திரு. ஜே. எஸ். வேலாயுதத்தின் சேவைநலம் பாராட்டுமுகமாக ஆசிரியர்கள் பிரிவுபசார விழாவொன்றை கொண்டாட தீர்மானித்துள்ளனர்.

# சாஸ்திரியின் மரணத்துக்கு உலகத்தலைவர்கள் அனுதாபம்

## பெரியமனிதர், சிறந்த ராஜதந்திரி எனபாராட்டு

நியுயோர்க், ஜன. 11

திரு. சாஸ்திரியின்மறைவு குறித்து உலகத்தலைவர்கள் ஆழ்ந்த அனுதாபம் தெரிவித்திருக்கிறார்கள்.

"திரு. சாஸ்திரியின் மறைவு இந்தியாவுக்கு மட்டுமின்றி, ஆசியாவுக்கு மட்டுமின்றி, உலகுக்கே பெரும் நஷ்டம். அவர் பெரிய மனிதர். பெரிய ராஜதந்திரி'' என ஐ. நா. பொதுக்காரிய தரிசி யுதாண்ட் தனது செய்தியில் கூறியிருக்கிறார்.

"துக்ககரமான இந்த நஷ்டம் ரஷ்ய மக்களுக்கும் உலகுக்கும் ஏற்பட்டுள்ளது. அவர் பெரிய ராஜதந்திரி. விஷயங்களைக் கையாள்வதில் கைதேர்ந்தவர். நம் காலதிதில் பெரிய மனிதர்களில் ஒருவர்'' என ரஷ்யப் பிரதமர் கோஸிஜின் கூறினார்.

"உலகத்தின் மாபெரும் ஜனநாயக நாட்டின் தலைவரான திரு. சாஸ்திரியின் மரபு சமாதானத்தில் ஆர்வம் கொண்ட மனித சமுதாயத்திற்கு பெருநஷ்டமாகும். பயனுள்ள பேச்சுக்குப்பின் அவர் மறைந்திருக்கிறார். எனக்கும் அமெரிக்க மக்களுக்கும் இது பெரிய இடியாக இருந்தது. அவர் இல்லாமல் உலகம் சிறிதாகிவிட்டது'' என அமெரிக்க ஜனாதிபதி ஜோன்ஸன் கூறியிருக்கிறார்.

"திரு. சாஸ்திரியின் மரணம் உலகம் முழுதுக்கும் பெருநஷ்டம்'' என மகாராணி எலிஸபெத் கூறியிருக்கிறார்,

லேகாஸ் சென்றிருக்கும் பிரிட்டிஷ் பிரதமர் வில்சன், திரு. சாஸ்திரியின் மரணம் காமன்வெல்த்துக்கும், உலகுக்கும் ஒரு பேரிழப்பு. இதை நன்றாக உணரமுடிகிறது எனக் கூறியிருக்கிறார்.

பாகிஸ்தான் அதிபர் அயூப்கான், திரு. சாஸ்திரியின் மரணம் பெருந் துயரம் அளித்திருப்பதாகக் கூறினார்

உள்நாட்டில் பல தலைவர்களும், ரஷ்ய தலைவர்களும், முதன்மந்திரிகளும் திரு. சாஸ்திரியைப் பாராட்டியிருக்கிறார்கள்.

## தாயுமானசுவாமிகள் குருபூசை

காரைநகர், புதன்

தாயுமானசுவாமிகளின் குருபூசை வரும் 16-ந் திகதி காலை 8 மணிக்கு காரைநகர் சிவ ஆச்சிரமத்தில் நடைபெறவிருக்கிறது.

## புதுவருட உத்தியோகத்தர்

உடுப்பிட்டி, திங்கள்

நெல்லியடி வாலிப முன்னணியின் நடப்புவருட உத்தியோகத்தர்களாகப் பின்வருவோர் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர்: தலைவர்: திரு சி செல்லத்துரை, உபதலைவர்: திரு கி சிவஞானம், இணைச் செயலாளர்கள்: திருவாளர்கள் மா சிவஞானசுந்தரம், தி பஞ்சராசா, பொருளாளர்: திரு செல்வராசா, உபபொருளாளர்: திரு கு சிவராசா, விளையாட்டுப்பகுதித் தலைவர் திரு நா திரவியம், வெளிவிவகாரப்பகுதி உத்தியோகத்தர்: திரு என் தருமராசா, சிரமதானக்குழுத் தலைவர்: திரு ரி மிக்கேல்ராசா, பத்திராதிபர்: திரு [illegible] யோகம்பலம். ஐவர்கொண்ட நிர்வாக சபைக் குழுவொன்றும் தெரிவுசெய்யப்பட்டது.

# ★ சாஸ்திரியின் கடைசி நிகழ்ச்சிகள்

டாஷ்கண்ட், ஜன.

காலஞ்சென்ற இந்தியப் பிரதமர் திரு. லால்பகதூர் சாஸ்திரியின் கடைசி நிகழ்ச்சிகள்.

இன்று அதிகாலை 1.25 க்கு தமது நெஞ்சில் வலி இருப்பதாக திரு. சாஸ்திரி கூறினார். பின்சற்று இருமினார். தனது அறையிலிருந்து வெளியே வந்து சொந்த வைத்தியரை அவர் அழைத்தார். ஆனால் அதற்குள் மூர்ச்சையடைந்தார். சில நிமிடங்களுக்குள் ரஷ்ய வைத்திய நிபுணர்கள் கூடி இருதயத்துக்கு துடிப்பூட்ட முயன்றார்கள். ஆனால் சிகிச்சை வெற்றிபெறவில்லை.

அவர் இறப்பதற்குச் சில மணி நேரத்திற்கு முன்புதான் டாஷ்கண்ட் பிரகடனம் இந்தியாவில் வெகுவாக வரவேற்கப்பட்டது.

### டெலிபோனில் பேசினர்

நேற்றிரவு 10-30 மணிக்கு திரு. சாஸ்திரி தனது மனைவிக்கும், மகனுக்கும், மருமகனுக்கும் ரேடியோ டெலிபோனில் பேசினார். தாம் இன்று காபூல் சென்றுவிட்டு புதன்கிழமை டில்லி வருவதாக அவர் அப்போது கூறினார்.

நேற்று அவர் அயூப்புடன் கூட்டறிக்கையில் ஒப்பமிட்டபின், அவரது ஆரோக்கியம் குன்றியிருந்தது. முதலில் இருமல் கண்டது. இடைவிடாது வியர்த்தது.

### கோஸிஜின் கண்ணீர்

மரணச் செய்தி கேட்டவுடன் ரஷ்யப் பிரதமர் கோஸிஜினும், மலினோவ்ஸ்கி, குரோமிக்கோ உட்பட எல்லா ரஷ்யத்தலைவர்களும் அவரது பிரேதம் வைக்கப்பட்டிருந்த அறைக்கு வந்து சேர்ந்தனர். திரு. கோஸிஜின் தலை குனிந்து மரியாதை செலுத்தினார். கண்களில் நீர்ததும்பியபடியே, "திரு. சாஸ்திரியுடன் நான் நடத்திய பேச்சுக்கள் என்மனதை விட்டு அகலாமல் என்றும் நிலைத்திருக்கும். திரு. சாஸ்திரி நமது காலத்தின் பெரிய மனிதர்'' என கோஸிஜின் கூறினார். திரு. அயூப்கானும் அங்குவந்து தன் இறுதி மரியாதையைச் செலுத்தினார்.

### நந்தா பிரதமர்

இன்றுகாலை 3-15 க்கு திரு. குல்சாரிலால்நந்தா பிரதமராக ஜனாதிபதிராதா கிருஷ்ணனுக்கு முன்பு பதவி ஏற்றுக் கொண்டார். இன்று 10 மணிக்குள் நந்தாவின் மந்திரிசபை அங்கத்தினர்கள் அனைவரும் பதவிப்பிரமாணம் எடுத்துக் கொள்வார்கள்.

மரணச்செய்தி கிடைத்தவுடன் ஜனாதிபதி ராதாகிருஷ்ணனும், மந்திரிசபை அங்கத்தினர்களும் ஸ்ரீமதி சாஸ்திரியின் இல்லம் சென்று துக்கம் தெரிவித்துக் கொண்டனர். இன்று அதிகாலை முதல் ஆயிரக்கணக்கான மக்கள் துக்கம் தெரிவிக்க குழுதுயவண்ணம் இருந்தனர். நாடு முழுவதும் 12 தினங்கள் துக்கம் அனுஷ்டிக்கப்படும்.

### மக்கள் தரிசனத்துக்கு

இன்றுமாலை 3-30 முதல் திரு. சாஸ்திரியின் பூதவுடல் பொதுமக்கள் தரிசனத்திற்காக வைக்கப்பட்டிருக்கும். நாளைக்காலை 10-30 க்கு பிரேத ஊர்வலம் தகனக்கிரியைகளுக்காகப் புறப்படும்.

இன்றும் நாளையும் அரசாங்கக் காரியாலயங்கள் யாவும் மூடப்பட்டிருக்கும்.

முக்கியத்துவம் வாய்ந்த தஸ்தாவேஜில் கையெழுத்திட்டோம்'' என சாஸ்திரி அயூப்பிடம் கூறியதே அவரது கடைசி வார்த்தைகள்.

மரணச்செய்தி உடன் இந்திய ஜனாதிபதிக்கும், ஸ்ரீமதி சாஸ்திரிக்கும் தெரிவிக்கப்பட்டது.

ரஷ்யப் பிரதமர் கோஸிஜின் அளித்த விருந்தில் திரு. சாஸ்திரி மகிழ்ச்சியுடன் அளவளாவிக்கொண்டிருந்தார். திரு. அயூப்புடனும், திரு. கோஸிஜினுடனும் அவர் தமாஷ்செய்துகொண்டிருந்தார். அப்போது அவரது உடல்நிலை ஆரோக்கியமாகவே இருந்தது

இன்று ஆப்கானிஸ்தான் வநதுசேரவிருந்த சாஸ்திரிக்கு பிரமாதவரவேற்பளிக்க காபூலில் பெரும் ஏற்பாடுகள் பூர்த்தியாக்கப்பட்டிருந்தன.

டாஷ்கண்ட் ஒப்பந்தம் பற்றி திரு. சாஸ்திரி நிருபர்களிடம் குறிப்பிடுகையில் 'அது ஒரு அரசியல் தஸ்தாவேஜுக்கும் மேலானது" என்றார்.

## * தனயனின் ஏமாற்றம்

புதுடில்லி, ஜன. 11

இன்றுகாலை1-15 க்குப்பின் சாஸ்திரியின் மரணச்செய்தி கிடைக்கச் சற்று முன் அவரது மூத்த புதல்வன் அவருக்கு டெலிபோன்செய்தார். ஆனால் தந்தை இறந்துவிட்டதாக அவருக்குப் பதிலளிக்கப்பட்டது. இச்செய்தி 90வயதான அவரது அன்னைக்கும் குடும்பத்தினருக்கும் அதிர்ச்சியை உண்டாக்கியது.

* (நேற்றைய விசேஷ பதிப்புக்களில் வெளியான செய்திகள்.)

## தோப்பு கிராமத்துக்கு புதிய சந்தை

யாழ்ப்பாணம், புதன்

பலவருடங்களாக தோப்புக் கிராமமக்கள் எதிர்பார்த்திருந்த புதிய சந்தை இப்போது அவர்களுக்குக்கிடைக்கவிருக்கிறது. இம்மாத முடிவுக்குள் இப்புதியசந்தை திறக்கப்படுமெனத் தெரிய வருகிறது. இப்பகுதி கிராம முன்னேற்றச் சங்கத்தினரின் முயற்சியினாலேயே இப்புதிய சந்தை திறக்கப்படவிருக்கிறது. இச்சந்தை இப்பகுதி மக்களின் கஷ்டங்களைத் தீர்க்க பெரிதும் உதவியாகஇருக்கும் என நம்பப்படுகிறது.

## இடமாற்றம்

உடுப்பிட்டி, செவ்வாய்

நெல்லியடி அரசினர் மத்தியமகா வித்தியாலயத்தில் ஆசிரியையாகக் கடமையாற்றிய தாமோதரம்பிள்ளை சோதிமுத்து கரவெட்டி மேற்கு மெதடிஸ்தமிஷன் (நாவலர் மடப்) பாடசாலைக்கு இடமாற்றஞ்செய்யப்பட்டுள்ளார்.

## புதிய நியமனம்

யாழ்ப்பாணம், புதன்

யாழ்ப்பாண மாநகரசபையின் பதினான்காம் வட்டார அங்கத்தவர் திரு. என். ரி. செல்லத்துரை சுகாதார மந்திரியால் யாழ்ப்பாணம்ஆஸ்பத்திரிக் கமிட்டியில் அங்கத்தவராக நியமிக்கப்பட்டுள்ளார்.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org




# சமாதான இலட்சியவாதி லால்பகதூர் சாஸ்திரி

— மகான் —

பாரத புண்ணிய பூமியிலே எத்தனையோ அவதாரப் புருஷர்கள், மகான்கள், தீர்க்கதரிசிகள் தோன்றி மறைந்துகொண்டிருக்கின்றனர். இந்த வரிசையில் இந்தியப் பிரதமர் - சமாதான இலட்சியவாதி திரு. லால்பகதூர் சாஸ்திரியும் பிறந்து-வளர்ந்து - புகழ்தேடி மறைந்துவிட்டார்.

இளமையிலே தந்தையை இழந்து, ஏழ்மையின்கோரப் பிடியில் சிக்கித் தவித்து, கஷ்டத்துடன் வளர்ந்து கல்லூரியிலே படிந்து அதன் இடையிலே தேசபக்தர்களின் உபதேசங்களுக்கு இலக்காகி, கைது செய்யப்பட்டு இதன் பின்னர் பட்டப் படிப்பு பயின்று, அரசியலில் ஈடுபட்டு பாராளுமன்ற அங்கத்தவராகி சேவையின் திறமையினால் மந்திரியாகி- நேருவின் மறைவின்பின் பிரதமராகி இந்திய நாட்டுக்காகவே உழைத்து, உழைத்து உலக சமாதானத்துக்காக டாஷ்கண்ட் சென்று வெற்றிக்கொடி நாட்டித் தாயகத்தை நோக்கி வீறுநடை போடு முன்னரே... அந்தோ அவரைக் காலன் கவர்ந்துவிட்டான்!

மகாத்மா காந்தி பிறந்த புண்ணியதினமான அக்டோபர் மாதம் இரண்டாம் திகதிதான் லால்பகதூரும் அவதரித்தார். இவர் பிறந்த தினம் 1904-ம் ஆண்டு அக்டோபர் மாதம் இரண்டாம் திகதியாகும். உத்தர பிரதேசத்தில் மோகல்சராய் எனும் கிராமத்தில் பிறந்தார். மிகவும் ஏழ்மையான குடும்பத்தில் பிறந்த லால்பகதூர், தனது ஒன்றரை வயதில் தந்தையை இழந்துவிட்டார். இதன் பின்னர் தாய்வழிப் பாட்டனின் பொறுப்பில் வளர்ந்துவந்தார்.

இவரது ஆரம்பக் கல்வி காசியில்தான் இருந்தது. படிக்கும்பொழுதே தேசபக்தர் காந்திஜீயின் கொள்கைகளினால் உந்தப்பட்டார். நாட்டுப்பற்று மேலிட பாடசாலை வாழ்க்கையையே துறந்து காந்திஜியின் வழி சென்றார் இருபத்தோராவது வயதில் இவருக்கு வாரணாசி பல்கலைக் கழகத்தில் ''சாஸ்திரி'' என்ற கௌரவப் பட்டம் வழங்கப்பட்டது. இதனைத் தொடர்ந்து இவரது பெயருடன் அந்த கௌரவப் பெயரான ''சாஸ்திரி''யும் தொடரலாயிற்று.

22-வது வயதில் இவர் அலகாபாத் நகரசபையின் அங்கத்தவரானார். 23-வது வயதில் இவருக்கும் லலிதாவுக்குமிடையே திருமணம் நடைபெற்றது. இல்லற வாழ்க்கையில் ஈடுபட்ட அவர் அரசியலிலும் தீவிரமாகப் பங்குகொள்ளத் தொடங்கினார். பல தடவைகள் கைது செய்யப்பட்டார். இந்தக் கட்டத்தில்தான் இந்தியப் பிரதமர் நேருஜீயின் நேரடித் தொடர்பும் இவருக்கு ஏற்பட்டது. ஈடிணையற்ற சேவையின் மூலம் உத்தர பிரதேச அரசாங்கத்தில் மந்திரியாக இருந்தபொழுது டில்லியில் இருந்து ஒரு அழைப்பு வந்தது. அந்த அழைப்பை நேருஜி அனுப்பியிருந்தார்.

1952-ம் ஆண்டில் ராஜ்ய சட்டசபை மந்திரியானார். பின்னர் ரயில்வே மந்திரியாகவும், வர்த்தகமந்திரியாகவும் பொறுப்பேற்கத் தொடங்கினார்.

அரியலூர் என்னுமிடத்தில் பாலமொன்றில் ரயில் விபத்தொன்று ஏற்பட்டு ஏராளமானவர்கள் பலியானபொழுது தமது மந்திரிப்பதவியை உதறித் தள்ளியவர் திரு. லால்பகதூர் சாஸ்திரியாகும். அவரின் தன்னலமற்ற சேவைக்கு இது ஒரு எடுத்துக் காட்டு.

வர்த்தக மந்திரியாகவிருந்த திரு. லால்பகதூர் சாஸ்திரி உள்துறை மந்திரியாகவிருந்த காலத்தில் நாட்டின் முழுப் பொறுப்பையும் இந்தியத் தலைவனிடம் ஒப்படைத்து நேருஜி மறைந்துவிட்டார். அதனைத் தொடர்ந்து 1964-ம் ஆண்டு ஜூன் மாதம் ஒன்பதாம் திகதி நாட்டின் அந்தப் புனிதமான பொறுப்பை திரு. லால்பகதூர் சாஸ்திரி ஏற்றுக்கொண்டார். அவரின் நாட்டுப்பற்று தீவிரமாகவிருந்தது. கடுமையாக உழைக்கத் தொடங்கினார்.

லால்பகதூர் சாஸ்திரி ஏழையாகவே பிறந்து வளர்ந்தார் பாடசாலையில் தனது ஆரம்பக் கல்வியை பயின்றபொழுது அவருக்குக் கிடைத்த செலவுப் பணம் மாதம் இரண்டரை ரூபா மட்டுமே. பணமில்லாமல் அவர் பட்ட கஷ்டம்கொஞ்சநஞ்சமல்ல. கையேந்திப பிச்சையெடுக்காமல் விட்டாரே தவிர, ஏழ்மையில் மிகவும் அவஸ்தைப்பட்டார். ஒருமுறை திரு. லால்பகதூர் சாஸ்திரி கங்கையைக் கடந்துசென்றுவிட்டார். காரணம்: படகில் ஏறி கங்கையைக் கடந்துசெல்ல, படகுக்காரனுக்குப் பணம்கொடுக்க அவரிடம் செம்புக் காசு கூட இல்லாததே.

பிரதமராகவிருந்த காலத்தில் திரு. சாஸ்திரியை ஏராள பொறுப்புக்கள் சூழ்ந்திருந்தன. எல்லாவற்றையும் கடுமையான மனஉறுதியுடன்தீர்த்துக்கட்டி பெரும் பிரச்னையான இந்திய—பாகிஸ்தான் சச்சரவையும் ஓரளவுதீர்த்து சரித்திரத்திலும் மேலும் சாதனையை ஏற்படுத்திவிட்டுத் தாயகம் திரும்பும் சில மணி நேரத்துக்குள்ளே டாஷ்கண்ட் பூமியில் மறைந்துவிட்டார்

திரு. சாஸ்திரி மன உறுதி கொண்டவர். எதனையும் தீர்த்துவைக்கும் வல்லமை படைத்தவர். சமாதானத்தை விரும்புபவர். அந்த இலட்சியத்துக்காகவே நாள் என்ன... மணி என்ன... நாழிகைநாழிகையாக உழைத்தவர். அவர் ஒருவீரபுருஷர் சமாதானவாதி. இலட்சியவாதி. அவர் புகழ்பெற்றுவிட்டார். அந்தப் புகழை பாரதநாடு பெற்றுவிட்டது. நாட்டுச் சேவையின் மூலம் அவர் ஒரு தியாகியாகிவிட்டார்.

## மூளைக்கு வேலை

எல்லோருக்கும் எனது 1966-ம் வருட புதுவருஷ வாழ்த்துக்கள். உங்களுக்கு மிகவும் விருப்பமான குறுக்கெழுத்துப் போட்டியுடன் இவ்வருடமூளைக்குவேலையை ஆரம்பிப்போம்.

இருபத்தைந்து (25) சிறு சதுரங்களைக் கொண்ட பெரியதொரு நாற்சதுரமொன்றை வரைந்துகொள்ளுங்கள். முதலில் அடைக்க வேண்டிய சதுரங்கள் (இடமிருந்து வலமாக) இரண்டாவது வரிசையில் ஐந்தாவது சதுரம். மூன்றாவது வரிசையில் நான்காவது சதுரம். நான்காவது வரிசையில், இரண்டாவது, நான்காவது சதுரங்கள். ஐந்தாவது வரிசையில் மூன்றாவது சதுரம்.

நிரப்பவேண்டிய சதுரங்களை இனி கவனிப்போம்.

(இடமிருந்து வலமாக) முதல் வரிசை: ''ஈழநாடு'' போயா மலரின் பெயர். இரண்டாவது வரிசை. முதல் நான்கு சதுரங்கள்; காடு. இது மாறுபட்டுக் கிடக்கிறது. ஐந்தாவது வரிசை: முதலிரு சதுரங்கள் - உருசி பார்ப்பது. இந்த வார்த்தையில் நடு எழுத்து இல்லை. கடைசி இரு சதுரங்கள் - இதுவென்றால் பலரும் விரும்புவர்.

(மேலிருந்து கீழாக) முதல் வரிசை: விண்ணில் பறக்கும் இரதம். இரண்டாவது வரிசை: முதல் மூன்று சதுரங்கள்: அழகான பெண். மூன்றாவது வரிசை முதல் நான்கு சதுரங்கள்: பெரிய துறவி. நான்காவது வரிசை முதலிரு சதுரங்கள்: இவன் வசம் செல்லாதவர்கள் உலகில் இருக்க முடியாது; தலை கீழாக கிடக்கும் இந்த வார்த்தையில் கடைசி எழுத்து இல்லை. ஐந்தாவது வரிசை. கடைசி மூன்று சதுரங்கள்- பெண்.

சரி, போட்டியைக் கவனமாகப் படித்து விடையை தபாலட்டையில் எழுதி எதிர் வரும் செவ்வாய்க்கிழமைக்கு முன்னர் எமக்கு அனுப்பிவையுங்கள். சரியாக விடையெழுதியவர்களின் பெயர்கள் மாணவர் மலரில் வெளியாகும். விலாசம்: ''மாணவர் மலர்'', 'ஈழநாடு'', த. பெ. 49, யாழ்ப்பாணம்.

- சாந்தா

விஞ்ஞானப் பெரியார்கள்

## மார்க்கோனி

- சி. சண்முகலிங்கம் -

இன்று வானொலி இல்லாத வீடுகள் உலகில் இருக்கும் என்றால் அது நம்பத்தகாததொன்றாகும். எங்கும் வானொலி. இவ் வானொலியைக் கண்டுபிடித்தவர் மார்க்கோனி என்ற விஞ்ஞானியாகும். இவர் இத்தாலி நாட்டில் 1874-ம் ஆண்டில் அவதரித்தார். 1896-ம் ஆண்டில் மின்சார அலைகளை ஆராய்வதில் ஈடுபட்டிருந்த மார்க்கோனி மின்சார அலைகளின்மூலம் செய்திகளை ஓரிடத்திலிருந்து வேறு இடத்திற்குப் பரப்பலாம் என்பதைக் கண்டுபிடித்தார். முதலில் இரண்டு மைல் தூரத்திற்கே பரப்பலாமெனக் கண்டுபிடித்த மார்க்கோனி தனது நீண்ட ஆராய்ச்சியின் பின்னர் செய்திகளை நாடுகளிலிருந்து மற்றைய நாடுகளுக்கும் பரப்பலாம் என்பதைக் கண்டுபிடித்து இங்கிலாந்தில் தபாற்பகுதியினருக்குக் காட்டிப் பெரும் புகழைப் பெற்றுக் கொண்டார்.

இவரது ஆராய்ச்சிகள் உலகிற்கு பெரிதும் உதவுவதைக் கண்ட இத்தாலிய அரசாங்கம் இவர் தனது ஆராய்ச்சியை மேலும் ஊக்கமாய் செய்யும்பொருட்டு ஒரு ஆராய்ச்சி நிலையத்தை அமைத்துக் கொடுத்துதவியது. இவரின் விடாமுயற்சியாலும், ஆழ்ந்த ஆராய்ச்சிகளின் பயனாக 1901-ல் போல்டு என்ற நகரத்திலிருந்து நியூபவுண்லாந்துக்கு கம்பியில்லாத் தந்திச் செய்திகளைப் பரிமாறி முன்னேற்றங் கண்டார். இதன் பயனாக 1909-ல் பௌதீகத் துறையில் நோபல் பரிசு பெறும் வாய்ப்புக் கிடைத்தது இந்திய விஞ்ஞான மேதையான ஜெகதீஸ்சந்திரபோஸ் என்பவரின் நண்பரான மார்க்கோனி அவரின் ஆராய்ச்சிகளைத் தானும் மேற்கொண்டு வானொலிச்செய்தி முறையைக் கண்டுபிடித்துப் புகழீட்டினார். 1937-ல் இவர் காலமானார்.

உதைபந்தாட்டம்

## அரியாலை கோஷ்டி வெற்றி

யாழ்ப்பாணம், புதன்

யாழ். ஸ்போட்ஸ் கிளப்பிற்கும் அரியாலை ஐக்கிய விளையாட்டுக் கழகத்தின் 3-ம் பிரிவு உதைபந்தாட்ட கோஷ்டிக்குமிடையில் நடைபெற்ற உதைபந்தாட்டப் போட்டியில் அரியாலைக் கோஷ்டி அமோக வெற்றியீட்டியது. வீரர் எஸ். செல்வராசாவை காப்டனாகக் கொண்ட அரியாலைக் கோஷ்டி போட்டி ஆரம்பமாகி முடியும்வரை ஒன்றன்பின் ஒன்றாகக் கோல்களை அடுக்கிக்கொண்டேபோனார்கள். யாழ். ஸ்போட்ஸ்கிளப்பில் வீரர்கள் நல்லநாதன், லோகநாதன் விட்டுக்கொடுக்காமல் விளையாடினார்கள்.

அரியாலைக் கோஷ்டியைச் சேர்ந்த வீரர்கள் ந. வாமசிவன், க. சிவபாலன், ந. வாமதேவன், சுரேந்திராமு ஆளுக்கு இவ்விரண்டு கோல்களும், ஐ. தேவராசா ஒரு கோலும் முறையே போட்டனர். யாழ். ஸ்போட்ஸ் கிளப் ஒரு கோலுமே போடவில்லை.

அரியாலை ஐக்கிய விளையாட்டுக் கழகத்தின் மூன்றும் பிரிவு யாழ். ஸ்போட்ஸ் கிளப்பை 9-0 கோல்களால் படுதோல்வியடையச் செய்தது. அரியாலை சனசமூக நிலைய மைதானத்தில் நடைபெற்ற இப்போட்டிக்கு எஸ். கே. மகாலிங்கம் மத்தியஸ்தராகக் கடமையாற்றினார்.

(5-ம் கலத் தொடர்ச்சி)

இணுவில் கோஷ்டியினர் மிகவும் உற்சாகமாக விளையாடினார்கள். இணுவில் கோஷ்டி முன்னணி வீரர்களான செ. இலகுநாதன், ச. குருலிங்கம் முறையே ஒவ்வொரு கோல் அடித்தனர். ஈற்றில் தேசிய விளையாட்டுக்கோஷ்டி 3-2 கோல்களினால் வெற்றியீட்டியது.




இ. போ. ச.

## வடபிரதேச ஊழியரின் விளையாட்டுப்போட்டி

யாழ்ப்பாணம், புதன்

இ. போ. ச. வடபிரதேச ஊழியரின் விளையாட்டுப் போட்டி வரும் நாளை யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி மைதானத்தில் நடைபெறும்.

பிரதம விருந்தினராக முன்னாள் யாழ்ப்பாண மேயர் திரு. எஸ். சி. மகாதேவா கலந்து கொள்வார்.

இ. போ. ச. வடபிரதேச ஊழியர் முதன் முறையாக நடத்தும் இவ்விளையாட்டுப் போட்டியில் பலவித விளையாட்டு நிகழ்ச்சிகள் இடம் பெறவிருக்கிறது. ஆண்களும் பெண்களும் இப்போட்டியில் கலந்து கொள்வார்கள் வடபிரதேச மனேஜர் காரியாலயம், யாழ்ப்பா[illegible] கிழக்கு டிப்போ, பருத்தித்துறை டிப்போ ஆகிய பகுதிகளைச் சேர்ந்த ஊழியர்கள் இவ்விளையாட்டுப் போட்டியில் பங்கு கொள்ள விருக்கிறார்கள்.

## பிளாக் அன் வயிட் வெற்றி

யாழ்ப்பாணம், வியா.

கட்டுடை பிளாக் அன்ட் வயிட் ஸ்போட்ஸ் கிளப்புக்கும் பண்டத்தரிப்பு வை. எம். சீ. ஏ. ஸ்போட்ஸ் கிளப்புக்குமிடையே சினேகிதபூர்வமாக நடைபெற்ற உதைபந்தாட்டப் போட்டியின்போது கட்டுடை பிளாக் அன்ட் வயிட் ஸ்போட்ஸ் கிளப் 3—2 கோல்களால் வெற்றிபெற்றது. இப்போட்டிக்கு திரு. நாகராசா மத்தியஸ்தராகக் கடமையாற்றினார்.

## தேசிய விளையாட்டுக் கழகம் வெற்றி பெற்றது

கோண்டாவில், புதன்

இணுவில் தேசிய விளையாட்டுக்கழக உதைபந்தாட்டக்கோஷ்டிக்கும் இருபாலை யுனைட்டட் உதைபந்தாட்டக் கோஷ்டிக்கும் இடையே இணுவில் எச்சாட்டி மைதானத்தில் நடைபெற்ற சிநேகபூர்வமான உதைபந்தாட்டப் போட்டியில் இணுவில் கோஷ்டியினர் 3-2 கோல்களினால் வெற்றியீட்டினர்.

விறு விறுப்பாக ஆரம்பமான இந்த ஆட்டத்தில் இருபாலை கோஷ்டியின் முன்னணி வீரர் பாலா தனது கோஷ்டிக்கு ஒரு கோல் அடித்துக் கொடுத்தார். பத்து நிமிடங்களின்பின் மேலும் ஒரு கோலை இருபாலை கோஷ்டியினர் போட்டு தமது கோல் எண்ணிக்கையை இரண்டாக உயர்த்தினர். இதைத் தொடர்ந்து போட்டி மிகவும் உச்சக் கட்டத்தை அடைந்தது. இணுவில் கோஷ்டியின் வலது முன்னணி வீரர் திரு. எஸ். மகேந்திரநாதன் தமது கோஷ்டிக்கு ஒரு கோலை அடித்துக் கொடுத்தார். இடைவேளையின் பின்

(2-ம் கலம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விளம்பரம்

### லொறி மூலம் சீமெந்து ஏற்றிச் செல்வதற்கான கேள்விப் பத்திரங்கள்

காங்கேசன்துறை காங்கேசன் சீமெந்துத் தொழிற்சாலையிலிருந்து அநுராதபுரம் சீமெந்து விற்பனவு நிலையத்திற்கு லொறிகள் மூலம் சீமெந்து ஏற்றிச் செல்வதற்கான கேள்விப் பத்திரங்கள் வரவேற்கப்படும். முடிவு 66-ம் ஆண்டு தை மாதம் 17-ந் திகதி பிற்பகல் 12 மணி வரை. இதர விபரங்கட்குக் கீழ்க்காணும் விலாசதாருடன் தொடர்பு கொள்க.

விற்பனவு அதிபர்,
காங்கேசன்துறை சீமெந்துத் தொழிற்சாலை.

காங்கேசன்துறை,
4-1-66. 1532





## கொழும்பு

புதன் 12 - 1 - 66

(செய்திகள்: காலை 7-15, பகல் 12-45, மாலை 6-00, இரவு 9-00)

**344 மீற்றர் & 61 மீற்றர்**

காலை 6-45 நாதாஞ்சலி, 6-50 சைவநற்சிந்தனை — தெ. பொ. மீனாட்சிசுந்தரம், 6-55 இஸ்லாமிய நற்சிந்தனை, 7-00 துதிப்பாடல்கள், 7-30 குரல்வகை, 7-45 திரைஇசை, 8-15 இஸ்லாமியகீதங்கள்.

**344 மீற்றர் & 49 மீற்றர்**

பகல் 12-00 சித்திரகானம், 1-00 கதம்பஇசை.

**344 மீற்றர் & 61 மீற்றர்**

மாலை 5-00 பிறந்ததின வாழ்த்துக்கள், 5-15 படத்திலிருந்து,

இரவு 6-15 கிராமசஞ்சிகை, 6-45 வயலின், 7-30 விவாதமேடை, 8-00 முஸ்லிம்நிகழ்ச்சி, 9-15 புல்லாங்குழலும் கிளாரினெட்டும், 9-30 பாட்டு, 10-00 நேயர் விருப்பம்.

## நெசவு நிலையம்

மட்டக்களப்பு, செவ்வாய்

மட்டக்களப்புத் தொகுதியைச் சேர்ந்த காத்தான்குடியில் நெசவு நிலையம் ஒன்று நிறுவப்படவிருக்கிறது. காத்தான்குடி ஐந்தாம் குறிச்சியைச் சேர்ந்த பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தினர் இந்த நெசவு நிலையத்தை நிறுவவிருக்கின்றனர். புதிதாக நெசவுத் தொழிலில் ஈடுபடுபவர்களுக்கு உதவி செய்வதோடு சம்பளத்துக்கு வேலை செய்பவர்களுக்கும் வாய்ப்புக் கொடுக்கப் போவதாக சங்கச் செயலாளர் தெரிவித்துள்ளார்.

## கரபந்தாட்டம்

உடுப்பிட்டி, செவ்வாய்

நெல்லியடி சன சமூக நிலைய விளையாட்டுக் கழகத்தின் 'ஏ' பிரிவினருக்கும் 'பி' பிரிவினருக்குமிடையே நடைபெற்ற கரபந்தாட்டப் போட்டியில் 'பி' பிரிவினர் தொடர்ந்து முதல் இரு ஆட்டங்களிலும் வெற்றியீட்டினர். இப்போட்டிக்கு வை. எம். சி. ஏ. உடற்பயிற்சி மாணவர் திரு. ந. திரவியம் மத்தியஸ்தராகக் கடமையாற்றினர்.

# "எதிர்க்கட்சிகளின் புதிய முறைத்திட்டம்"

—பிரதமர்

பம்பலப்பிட்டி, செவ்வாய்

''எதிர்க் கட்சி எம். பி.க்கள் பார்லிமெண்டில் தமது ஆசனத்தில் அமர்ந்துகொண்டு, வெளியே குழப்பமொன்றை நடத்துவதற்குப் புதிய முறையொன்றினைக் கையாண்டுள்ளனர். புத்த பிக்குகள் முன்வரிசையிலும், அதன் பின்னால் பெண்களும் பிள்ளைகளும், அதனையடுத்து ஆண்களும் செல்வதே இந்தப் புதிய முறையாகும்.''

பிரதமர் டட்லி சேனநாயக்கா நேற்று பார்லிமெண்ட் ஒத்திவைக்கப்படும் சமயத்தில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

இதுதான் எதிர்க் கட்சியின் புதிய திட்டமென்பதற்குப் போதியளவு சாட்சியங்கள் கிடைத்துள்ளனவென்றும் பிரதமர் தெரிவித்தார்.

புத்த பிக்குகள்மீது தான் வைத்திருக்கும் மதிப்புத்தான் இவைகளையெல்லாம் தடுத்து நிறுத்துவதற்கு நடவடிக்கைகளை எடுக்கச் செய்ததென்றும், அவர்களை இதிலிருந்து காப்பாற்றவேண்டுமென்பதற்காகவே தக்க நடவடிக்கைகள் எடுக்கப்படுகிறதென்றும் கூறினார்.

அதனால்தான் புத்தபிக்குகள் கூட்டம் கூட்டமாகவோ, குழுவாகவோ வரவிடாது தடுக்கப்படுகின்றனரென்றும் பிரதமர் சொன்னார்.

அவசரகாலச் சட்டத்தின் கீழ் புத்த பிக்குகளை நகரில் நடமாடவிடக் கூடாதென்று பொலிசுக்குச் சட்டம்போட்டிருப்பது உண்மைதானா என்று திரு. பீட்டர் கெனமன் கேட்ட கேள்வியொன்றுக்குப் பிரதமர் பதிலளிக்கையில், தவறான முறையில் பிரசாரங்கள் நடைபெறுகிறதென்று கூறினார்.

# தனிமனிதனின் வாழ்வுக்கு சட்டம் துணைசெய்யவேண்டு

பிரதமர் டட்லி

பம்பலப்பிட்டி, செவ்வாய்

'சட்டம் தனி மனிதனின் அன்றாட வாழ்வுக்கு உதவக்கூடிய வகையில் இயற்றப்படவேண்டும். அவனது வாழ்க்கை ஒரு உண்மையான வாழ்க்கையாக அமைய சட்டம் துணைபுரியவேண்டும்'.

இவ்வாறு பிரதமர் திரு. டட்லி சேனநாயக்கா சர்வதேச ஜூரிஸ்டுகள் (இலங்கை பிரிவு) கமிஷனால் ஏற்பாடு செய்யப்பட்ட சட்ட பரிபாலனம் பற்றிய கருத்தரங்கை ஆரம்பித்து வைத்துப் பேசுகையிலேயே மேற்கண்டவாறு கூறினார்.

ஆசிய, காமன்வெல்த் நாடுகளின் பிரதிநிதிகள் கலந்துகொண்ட இக்கருத்தரங்கில் பிரதமர் மேலும் பேசுகையில் கூறியதாவது:

எமது நாடு சரித்திரகாலம் தொட்டே பல தேசத்தவர்களைக் கவர்ந்துள்ளது. இங்கு வந்த அவர்கள் அவர்களது மொழி, மதம், சட்டம் ஆகியவற்றை எமக்குத் தந்து சென்றுள்ளார்கள்.

கிழக்கிலிருந்தும் மேற்கிலிருந்தும் அவர்கள் வந்தார்கள். அவர்கள் எம்முடன் கலந்து உறவுகொண்டார்கள்.

இவ்வித கலப்புக்களில் எத்தனையோ பிரிவுகள் இருந்தபோதும் எமக்குள் இருந்து வரும், வளர்ந்து வரும் ஜனநாயகக் கொள்கையின்மீதான பற்று நம்பிக்கை மிக முன்மாதிரியாக அமைந்துள்ளது.

## சாவகச்சேரியில் பஸ் - லொறி விபத்து

சாவகச்சேரி, செவ்.

சாவகச்சேரி பொலிஸ் நிலையத்திற்கு அருகாமையில், பிரதான வீதியில் இன்று காலை நிகழ்ந்த பஸ்-லொறி விபத்தினால், போக்குவரத்து சுமார் ஒரு மணி நேரம் தடைப்பட்டது.

பஸ்ஸிற்கும், லொறிக்கும் சிறுசேதமேற்பட்டது. பஸ் பிரயாணிகளுக்கோ லொறியில் வந்தவர்களுக்கோ காயமேற்படவில்லை. யாழ்ப்பாணத்திலிருந்து இன்று காலை மூலைத்தீவிற்குச்சென்ற ஒற்றைத்தட்டு பஸ், ஒரு மரத்திற்கருகில் சென்றுகொண்டிருந்தபொழுதே இவ்விபத்து ஏற்பட்டது.

இவ் விபத்தினால் யாழ்ப்பாணத்திலிருந்து வந்த 4 பஸ்களும், யாழ்ப்பாணத்தை நோக்கிச் சென்ற 5 பஸ்களும், மற்றும் பஸ், லொறி, வண்டிகள் ஆகியனவும் சுமார் ஒரு மணிநேரம் போக்குவரத்துசெய்[illegible]யாமல் தடைப்[illegible]

## பெரியகடை படுகொலை 23ல் விசாரணை

யாழ்ப்பாணம், புதன்

பெரியகடை கஸ்தூரியார் வீதிப் படுகொலை வழக்கு நேற்றுக் காலை யாழ்ப்பாணம் மாஜிஸ்டிரேட் கோர்ட்டில் பதில் மாஜிஸ்டிரேட் திரு. வி. நவரத்தினராசா முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டபோது மாஜிஸ்டிரேட் விசாரணையை இம்மாதம் 23-ந் திகதி வரை ஒத்திவைத்தார்.

## விசாரணை ஒத்திவைப்பு

யாழ்ப்பாணம், புதன்

கரையூரில் சைமன் என்பவர் கொலைசெய்யப்பட்டது சம்பந்தமாக கைதுசெய்யப்பட்டு ரிமாண்டில் வைக்கப்பட்டிருந்த கணவனும் மனைவியும் யாழ்ப்பாணம் மாஜிஸ்திரேட் முன்னிலையில் ஆஜர்செய்யப்பட்டனர்.

மாஜிஸ்திரேட் விசாரணையை இம்மாதம் 18-ந் திகதிவரை ஒத்திவைத்தார்.

## பதுளை புதிய மேயர் ரத்வத்தை தெரிவுசெய்யப்பட்டார்

பதுளை, செவ்.

ஐக்கிய தேசியக் கட்சியைச் சேர்ந்த திரு. மில்ரோய் ரத்வத்தை பதுளை நகரத்தின் புதிய மேயரா தெரிவுசெய்யப்பட்டுள்ளார் பதுளை மாநகரசபைக் கமிஷனர் திரு. எச். பி. சேரசிங்கா தலைமையில் நடைபெற்ற பதுளை மாநகரசபையின் விசேஷ கூட்டத்தில் திரு. ரத்வத்தை இரு அதிகப்படியான வாக்குகளால் மேயராகத் தெரிவுசெய்யப்பட்டார். இவருடன் திரு. [illegible]

## பிரியாவிடை வைபவம்

வவனியா, புதன்

''நாட்டில் உள்ள நெருக்கடியான சூழ்நிலைக்கு நாம் முன்மாதிரியாக நடந்து காட்டவேண்டும். இன்று இலங்கையில் பொருளாதார நிலை மிகவும் குன்றிப்போய் இருக்கின்றது. ஆகையால் இந்நாட்டிலுள்ள ஒவ்வொருவரும் நாட்டுப் பற்றுடன் தமது பணியைச் செய்ய வேண்டும்.''

மன்னாருக்கு இடமாற்றம் செய்யப்பட்டிருக்கும் விவசாய விஸ்தரிப்பு அதிபர் திரு. எம். காராளசிங்கம் தமக்கு அளிக்கப்பட்ட பிரியாவிடை வைபவத்துக்கு நன்றிதெரிவித்துப் பேசுகையில் மேற்கண்டவாறு கூறினார்.

திருவாளர்கள்: வி. நடராசா, ஆ. கணபதிப்பிள்ளை, பி. கனகநாயகம், பி. தருமலிங்கம், எஸ். சிவராசா. கே. நாகரத்தினம் ஆகியோர் உட்படப் பலர் உரைநிகழ்த்தினர்.

## சுவாமி விவேகானந்தர் ஜயந்தி

யாழ்ப்பாணம், புதன்

ஆத்மீகபுருஷர் சுவாமி விவேகானந்தரின் ஜயந்தியைக் கொண்டாட இன்று பல சமய ஸ்தாபனங்கள் ஏற்பாடுசெய்துள்ளன.

## பொங்கல் விழா

யாழ்ப்பாணம், புதன்

தொண்டமானாறுசெல்வச்சந்நிதி கோவிலில் வருகிற வெள்ளிக்கிழமை ஆறுகால பூஜையும், காலை 11 மணிக்கு பொங்கல் விழாவும் நடைபெறவிருக்கிறது. கல்லூரிப் பிள்ளைகள் பக்திப் பாடல்கள் பாடுவார்கள். திரு. முத்துக்குமார ஐயர் இவைகளை நடத்திவைப்பார்.


யாபாரம் பெருக விளம்பரம் செய்க

## வரிவிளம்பரம்

### விற்பனைக்கு

புதிதாகக் கட்டப்பட்ட வீடும், வளவும் 6 பரப்பு விஸ்தாரம். புகையிரத நிலைய வீதி, சுன்னாகம். ரயில் நிலையம், தபால் நிலையம், சந்தைக்குச் சமீபம். உடனே விண்ணப்பிக்கவும். இல. 1742, 'ஈழநாடு' மேற்பார்த்து என எழுத்துமூலம் விண்ணப்பிக்கவும். 1742

நல்லூர் கந்தசுவாமி கோவில் வடகிழக்கு வீதி மூலையில் ஐந்துபரப்பு நிலம் விற்பனைக்கு இருக்கிறது. விரும்புவோர் தொடர்பு கொள்ளவும். திரு. ஆர். சிவஞானம், 33, சப்பல்தெரு, யாழ்ப்பாணம். 1718

மாநகரசபை எல்லைக்குட்பட்டதும், யாழ் வீதியில் அமைந்ததுமான இரண்டரைப் பரப்புக் காணியில் ஏழு அறை கொண்டு அமைந்த அழகான வீடும், அதில் நடைமண்டபமும் உட்பட மின்சார வசதியும் பெற்று புகையிரத பஸ் நிலையங்களுக்கு மிகவும் அண்மையிலுள்ளது. வளவில் வருமான பிரயோசனம்உண்டு. விபரங்களுக்கு: கே. நடராசா, சரஸ்வதி விலாஸ், 29/2, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். 1744

### கல்வி

எல்லாத் தரங்களுக்கும் விசேஷ ஆங்கிலக் கல்வி போதிக்கப்படுகின்றன. சேருங்கள்: யாழ்ப்பாண டியூட்டோறியல் கல்லூரி, கைலாசபிள்ளையார் கோவிலடி, நல்லூர், யாழ்ப்பாணம். 1710


## யாழ். மாநகரசபை

யாழ்ப்பாணம், புதன்

யாழ்ப்பாணம் மாநகரசபைக் கட்டிடத்தின்மீது மாநகரசபையின் 'கொடி' திரு. சாஸ்திரியின் மறைவுக்கு அனுதாபந் தெரிவிக்குமுகமாக அரைக்கம்பத்தில் பறக்கவிடப்பட்டிருந்தது


வெற்றிகரமான 2வது வாரம்!

வெலிங்டன்

(யாழ்ப்பாணம்)

தினசரி 2-30, 6-30, 9-30.

விடுமுறை நாட்களில் காலை 10 மணிக்கு

வீரக்காவியத்தின் விடிவிளக்கு

வெற்றித் தமிழகத்தின் பேசும் பெண் தெய்வம்

கற்புக்கரசி கண்ணகியின் வரலாறு!



மேகலா பிக்சர்ஸ அளிக்கும்

கருணாநிதியின்

# பூம்புகார்

எஸ். எஸ். ஆர். — விஜயகுமாரி

கே. பி. சுந்தராம்பாள்,

ராஜஸ்ரீ, நாகேஷ் - மனோரமா, ஓ. ஏ. கே. தேவர்

மற்றும் பலர் நடித்து

அனேகரின் பாராட்டுதலைப்பெற்ற திரைஓவியம்.

டைரக்ஷன் — நீலகண்டன்.

கதைவசனம் —மு. கருணாநிதி.

இசை — சுதர்சனம்.


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# விமான நிலயத்தில் மக்கள் கதறி அழுதனர்

## அமெரிக்கஉபஜனதிபதிஹம்ப்ரி,வெளிநாட்டுமந்திரி ரஸ்க், மவுண்ட்பேட்டன் உட்பட பலர் வருகை

புதுடில்லி, ஜன. 11

இந்தியாவுக்கும் பாகிஸதானுக்குமிடையிலுள்ள தகராறுகளுக்குத் தீர்வுகாணுமுக
மாக சோவியத் நாட்டில், டாஷ்கண்ட் நகரில், பாகிஸதான் அதிபர் அயூப்
கானுடன் பிரகடனம் ஒன்றில் கைச்சாத்திட்டு வெற்றிவீரராக, சமாதான வீர
ராக நாளை தாய்நாட்டுக்குத் திரும்பவிருந்த ஸ்ரீ லால்பகதூர் சாஸதிரிக்கு
வீரவரவேற்பு அளிக்கக் காத்திருந்த மக்கள், இன்று பிற்பகல் 2-31 மணிக்கு
புதுடில்லி, பாலம் விமானநிலயத்தில் வந்திறங்கிய ஸ்ரீ சாஸதிரியின் பூதவுடலை,
அழுத கண்ணும் சிந்திய மூக்குமாக சோகமே உருவாகநின்று வரவேற்க
வேண்டிய துர்ப்பாக்கிய நிலக்கு ஆளானுர்கள். பலர் சோகம் தாங்காது
மயங்கி விழுந்தனர். ஸ்ரீ சாஸதிரியின் பூதவுடலைத் தாங்கிவந்த சோவியத்
விமானம், விமானநிலயத்தில் தரைதட்டியதுமே அங்கு குழுமியிருந்த மக்கள்
வாய்விட்டுக் கதறியழுதனர்.

### டாஷ்கண்ட் விமானநிலயத்தில் ....

ரஷ்யப் பிரதமர் கோஸிஜினும், பாகிஸ்தான் ஜனதிபதி அயூப்கானும் முன்னல்
தாங்கிச்செல்ல காலஞ்சென்ற சாஸ்திரியின் பூதவுடல் டாஷ்கண்ட் விமான
நிலயத்தில் இன்று விமானத்தில் ஏற்றப்பட்டது.

திரு. சாவன், திரு. சுவர்ண்சிங் ஆகியோர் பூதவுடலை பின்னல் தாங்கிச்சென்ற
னர்.

அதற்குமுன் சடலம் பீரங்கிவண்டியில் வைக்கப்பட்டு டாஷ்கண்ட் தெரு வழியே
சென்றபோது 10 லட்சம் ரஷ்ய மக்கள் இருமருங்கிலும் மௌனமாக இந்
தியத் தலவருக்கு மரியாதைசெய்தனர். வழிநெடுக சோவியத்துருப்புக்கள்
அணிவகுத்துநின்றன.

பூதவுடல்சென்ற டாஷ்கண்ட் வீதி நெடுகிலும், நகரெங்கும் கறுப்புக்கொடிகள்
பறக்கவிடப்பட்டிருந்தன. பூதவுடலை ஏற்றிவரும் விமானத்தில் பாகிஸ்தான்
வர்த்தக மந்திரியும், டில்லியிலுள்ள பாகிஸ்தான் ஹைகமிஷனரும், திரு.
சாஸ்திரியுடன் சென்றவர்களில் 28 இந்தியத் தூதுகோஷ்டியினரும் வருகிறார்
கள்.

### அமெரிக்க உப ஜனதிபதி வருகிறர்

அமெரிக்க ஜனதிபதி ஜோன்ஸனின் சார்பில் உப ஜனதிபதி ஹியுபர்ட் ஹம்ப்ரி,
வெளிநாட்டுமந்திரி ரஸ்க், முன்னள் அமெரிக்க ஸ்தானிகர்களான ஹென்றி
கூப்பர், கால்பர்க் ஆகியோர் திரு. சாஸ்திரியின் இறுதிச்சடங்கில் கலந்து
கொள்ள டில்லிவருகிறர்கள்.

பிரிட்டிஷ் மகாராணியின் சார்பாக மவுண்ட்பேட்டன் பிரபு வருகிறர்.

பிரிட்டிஷ் அரசாங்கத்தின் சார்பாக மந்திரி ஜார்ஜ் சவுல் வருகிறர்.

### பாரத ரத்னம் சாஸதிரி

திரு. சாஸ்திரியின் பிரேதத்தைத் தாங்கிய விமானம் பாகிஸ்தான் மேலாகப் பறந்து டில்லிவந்தது. உயிருள்ள சாஸ்திரியை பாகிஸ்தான் மேலாகப் பறக்குமாறு திரு. அயூப் முன்பு கேட்டதற்குப் பதில் அவரது பிரேதத்துடன் விமானம் பறந்தது.

மரணத்துக்குப்பின் மரியாதையாக 'பாரத ரத்னம்' என்ற உயர்ந்த விருதை ஜனதிபதி ராதாகிருஷ்ணன் திரு. சாஸ்திரிக்கு அளித்திருக்கிறர்.

டாஷ்கண்டிலிருந்து புறப்படு முன் திரு. சாவனும். திரு சுவர்ண்சிங்கும் விடுத்த அறிக்கையில், டாஷ்கண்ட் பிரகடனத்தில் ப்பமிட்டது, திரு சாஸ்திரியின் தீரமிக்க கடைசிச் செயல் எனக் கூறியிருக்கிறர்கள். திரு. சாஸ்திரி பாரதத்தின் மகா புதல்வர்களில் ஒருவராக சரித்திரத்தில் இடம் பெறுவார் என்றும் அவர்கள் கூறியுள்ளனர்.

பாரத - பாகிஸ்தான் உறவுக்கு திரு. சாஸ்திரியின் மரணம் துயரளிக்கும் செய்தியென அயூப்கான் கூறினர்.

சோவியத், சுப்ரீம் சோவியத் உயர் தலைவர்களின் மந்திரிகள் கமிட்டி அனுப்பியுள்ள அனுதாபச் செய்தியில் திரு. சாஸ்திரி மனப்பூர்வமாக காந்தி, நேரு ஆகியோரின் பணியைத் தொடர்ந்து சமாதானத்துக்குப் பாடுபட்டாரென்றும், அவர் ரஷ்யாவின் சிறந்த நண்பர் என்றும் கூறியுள்ளது.

பாலம் விமான நிலயத்தை அடைந்த ரஷ்ய இலூஷியன் 18 விமானத்திலிருந்து திரு. சாஸ்திரியின், தேசிய மூவர்ணக் கொடியினல் போர்த்தப்பட்ட பூதவுடலை 6 ஜெனரல்கள் தோளில் தூக்கிவந்து பீரங்கி வண்டியில் ஏற்றினர்கள். சரியாக பிற்பகல் 2-57 க்கு திரு. சாஸ்திரியின் பூதவுடல் இந்திய மண்ணுக்குக் கொண்டுவரப்பட்டது.

### அணிவகுப்பு மரியாதை

பூதவுடலுக்கு முப்படையினர் அணிவகுப்பு மரியாதை நடத்தினர். ஜனதிபதி ராதா கிருஷ்ணன், உப ஜனதிபதி ஹுஸெய்ன், பிரதமர் நந்தா, இதர மந்திரிகள், எம்.பி.க்கள், இதர முக்கியஸ்தர்கள், முப்படைத் தளபதிகள், ராஜீயத் தூதர்கள் ஆகியோர் வந்திருந்தனர். கறுப்பு உடை அணிந்த ஏராளமானேர் அவர்களிடையே காணப்பட்டனர்.

திரு. சாஸ்திரியின் குடும்பத்தினர் பூதவுடலைக்கண்டவுடன் அழுதனர். வேறு பலரின் அழுகைக்குரல்களும் இடம்பெற்றன. பிரமாண்டமான ஜனசமுத்திரத்தில் சிலர் மயங்கி விழுந்தனர்.

முப்படைத் தலைவர்கள் திரு. சாஸ்திரியின் பூதவுடல் தாங்கிய பீரங்கிவண்டிக்கு முன் ஊர்வலத்துக்குத் தலைமைவகித்துச் சென்றனர்.

திரு. வி. கே. கிருஷ்ண மேனன், திரு. டி. டி. கே., காஷ்மீர் முதல்வர் சாதிக், ஸ்ரீமதி கிருபாளினி, ஸ்ரீமதி இந்திராகாந்தி, டாக்டர் கரன்சிங், டாக்டர் அசோக் மேத்தா, டாக்டர் பி. கே. சென் ஆகியோர் கறுப்பு உடையணிந்து காணப்பட்டனர். மந்திரி சாவன் அழும் காட்சி கூட்டத்தில் தென்பட்டது.

பிரேதத்தின்மீது டாஷ்கண்டில் வைக்கப்பட்ட ஏராளமான மலர்வளையங்களும் இருந்தன.

நாளைக்காலை 10-30க்கு திரு. சாஸ்திரியின் பூதவுடல் பிரதமரின் இல்லத்திலிருந்து சாந்திபவனத்திற்கு தகனக்கிரியைகளுக்காக எடுத்துச் செல்லப்படும்.

# "தாங்கமுடியாத கொடிய செய்தி"

— ராஜாஜி

சென்னை, ஜன. 11

இந்தியப் பிரதமர் ஸ்ரீ லால்பகதூர் சாஸ்திரியின் மரணச்செய்தியைக் கேட்ட இந்திய முதுபெரும் ராஜதந்திரி சக்ரவர்த்தி ராஜகோபாலாச்சாரியார், ''தாங்கமுடியாத கொடிய செய்தி இது. எதுவுமே சொல்வதற்கு நா எழவில்லை'' என்றார்.

காங்கிரஸ் தலைவர் காமராஜர், தமிழ்நாடு முதன் மந்திரி திரு. எம். பக்தவத்சலம், தொழில்மந்திரி ஆர். வெங்கட்ராமன் ஆகியோர் சென்னையிலிருந்து உடனடியாகப் புதுடில்லிக்குப் புறப்பட்டுச் சென்றனர்.

தமிழ்நாட்டில் பொங்கல் திருநாளையொட்டி ஏற்பாடு செய்யப்பட்டிருந்த ஏர் முனைத் திருநாள் கொண்டாட்டம் சாஸ்திரியின் மறைவு குறித்து ரத்துச் செய்யப்பட்டுவிட்டது.

தமிழ்நாட்டில் பாடசாலைகள், கல்லூரிகள், தொழில் நிலயங்கள், அரசாங்க இலாகாக்கள், வங்கிகள் யாவும் இன்றும் நாளையும் மூடப்பட்டிருக்கும். சென்னை கோட்டையிலும் அரசாங்கக்கட்டிடங்களிலும் தேசீயக்கொடிகள் அரைக்கம்பத்தில் பறக்கவிடப்பட்டுள்ளன.

### யாழ். மாநகரசபை அனுதாபம்

யாழ்ப்பாணம், புதன்

பாரதப்பிரதமர் திரு. சாஸ்திரியின் பிரிவுக்கு அனுதாபம் தெரிவிக்கும் வகையில் நேற்று யாழ்ப்பாணம் நகரமண்டபத்தில்கொடி அரைக்கம்பத்தில் பறக்கவிடப்பட்டது.

### தேர்தல் ஒத்திவைப்பு

யாழ்ப்பாணம், புதன்

இன்று நடைபெறவிருந்த வல்வெட்டித்துறை பட்டின சபைத்தேர்தல் அவசரகால நிலமை காரணமாக பின்போடப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கான மறு திகதியும் விபரமும் பின்னர் அறிவிக்கப்படும்.

### இரு எம்-பி.க்கள்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

யில்லை. சபையில் ஒழுங்கையும் கட்டுப்பாட்டையும் நிலநாட்டவே இங்கு நான் இருக்கின்றேன். இதை மீறுபவர்கள் மீது நான் நடவடிக்கை எடுத்தே தீருவேன்.

பீட்டர் கெனமன்: இது வெட்கக் கேடான ஒரு செயலாகும். இதனை அனுமதித்ததே பெரும் கேவலம்''

இறுதியில் தமிழ் மசோதா வாக்கெடுப்புக்குவிடப்பட்டு இனிதே நிறைவேறியது.

### சாஸதிரி..

(1-ம் பக்கத் தொடச்சி)

மக்கள் கூட்டம் கட்டுக்கடங்காமல் இருப்பதால் விசேஷ ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கின்றன. பிரதமரின் இல்லத்துக்கு வெளியேமக்கள் கியூ வரிசையில் சுமார் ஒன்றரைமைல்தூரம் வரை நின்றனர்.

வெளிநாட்டு தலைவர்கள் சிலர் நேற்று இங்கு வந்துவிட்டனர். பலர் இன்றுவருகிறர்கள்.

ஆப்கானிஸ்தான் பிரதமர் நேபாள மந்திரிசபை உறுப்பினர், பாகிஸ்தான் வர்த்தக மந்திரி ஆகியோர் வந்து விட்டனர். இன்று பிரிட்டிஷ் துணைப் பிரதமர் திரு. பிரவுண், சிங்கப்பூர் கல்வி மந்திரி, யுதாண்ட் விசேஷ பிரதிநிதி, ஐக்கிய அரபு குடியரசு பிரதமரின் விசேஷ பிரதிநிதி, ஜப்பான் ஆளும் கட்சி பிரதிநிதி, உட்பட பல தலைவர்களும் வந்து நேரில் அஞ்சலி செலுத்துவர்.

### தமிழ்...

(1-ம்பக்கத்தொடர்ச்சி)

ருந்தனர். மூதூர்த்தொகுதி எம்,பி. திரு, ஏ எல். ஏ. மஜீத் கல்முனை எம். பி, திரு. எம். எஸ். காரியப்பர் ஆகியோர் சபைக்கு வரவில்லை- திருமதி குசுமாராஜரத்தின எதிர்த்துவாக்களித்திருந்தார்.

#### கரகோஷ ஆரவாரம

மசோதாவாக்கெடுப்புக்கு விட்டு நிறைவேற்றப் பட்டதும் அரசாங்கக்கட்சி எம். பிக்கள் விண்ணைப் பிளக்கும் வண்ணம் பலத்த கரகோஷம் செய்து மகிழ்ச்சி ஆரவாரம் செய்தனர்.

#### எதிர்க்கட்சியினர் வெளியேறினர்.

மசோதா வாக்கெடுப்புக்கு விடப்பட் டதும்எதிர்க்கட்சியினர் எதிராக வாக்களித்துவிட்டு சபையிலிருந்து ஒவ்வொருவராக வெளியேறத்தொடங்கினர். பார்லிமெண்டைச் சுற்றிப்பலத்த பந்தோபஸ்து ஏற்பாடுகள் செய்யப்படடிருந்தன. டாக்டர் என்.எம்.பெரேராகுனிந்த தலை நிமிராமல் சபைக் கட்டிடத்தை விட்டு வெளியேறினர்.

### இலங்கை இந்தியர் சங்கம் அனுதாபம்

யாழ்ப்பாணம், திங்.

''பாரதப்பிரதமர் திரு. லால்பகதூர்சாஸ்திரியின் மரணச் செய்தி கேட்டு நாங்கள் மிகவும் அதிர்ச்சியடைந்தோம். எங்களது ஆழ்ந்த அனுதாபங்களை தங்களுக்கு தெரிவித்துக்கொள்கிறேம்'' என்று யாழ்ப்பாணத்திலுள்ள இலங்கை இந்தியர் சங்கத்தினர் இந்திய ஜனதிபதி டாக்டர் ராதாகிருஷ்ணனுக்கும் தற்காலிக பிரதமந்திரி திரு. நந்தா, திருமதி சாஸ்திரிக்கும் இலங்கையில் உள்ள இந்திய தூதருக்கும் அனுதாபத் தந்திகள் அனுப்பிவைத்துள்ளனர்

நேற்று இலங்கை இந்தியர் சங்கத் தலைவர் திரு. கே. வெங்கிடசாமி தலைமையில் அங்கத்தவர்கள் அவசரக் கூட்டம் கூடி மறைந்த பிரதமரின் உருவப்படத்திற்கு மலர்மாலையிட்டு இரு நிமிட மௌன அஞ்சலி செலுத்தினர். கூட்டத்தில் திருவாளர்கள் கே. மாணிக்கம், வி. ஐயாத்துரை உட்பட பலர் பேசினர்.

# சீன மௌனம்

இன்று பிற்பகல் வரை கிடைக்கப்பெற்ற செய்திகளின்படி சாஸ்திரியின் மரணச் செய்தி குறித்து பீகிங் வானெலி எதுவும்தெரிவிக்கவில்லை. பத்திரிகைகளும் எதுவுமே வெளியிடப்படவில்லை. டாஷ்கண்ட் பேச்சுவார்த்தைகளின் வெற்றி குறித்தும் சீன அபிப்பிராயம் எதுவுமே வெளியிடவில்லை.

வெளிநாட்டு பத்திரிகைகளில் சாஸ்திரியின் மரணச் செய்தி பெரிதாக பிரசுரிக்கப் பட்டிருந்தன. அமெரிக்கப் பத்திரிகைகளிலும் மரணச் செய்திகள் கொட்டை எழுத்துகளில் பிரசுரிக்கப் பட்டிருந்தன.


**காணவில்லை**

11-1-66 (செவ்வாய்க்கிழமை) காலை 11 மணியளவில் யாழ்ப்பாணமிருந்து மானிப்பாய் போகும் பஸ்ஸில் 6'' நீளம் 4'' அகலம் 2'' உயரங்கொண்டபெட்டி. அதற்குள் இருக்கும் சாமான் ஒரு Hearing Aid. தைஎடுத்துக்கொடுப்பவருக்கு ரூபா 10/- இனும்கொடுக்கப்படும். த. சின்னத்துரை, உலாந்தா, கோப்பாய். 1745

**நியூ காலிங்கன்**
(இணுவில்)
சனி—ஞாயிறு 2-30 மணி
ரஞ்சன் - அஞ்சலிதேவி
நடித்த
**நீலமலைத் திருடன்**

**ராஜா**
(யாழ்ப்பாணம்)
தினசரி 2-30, 6-30, 9-45
எம். ஜி. ஆர்-சரோஜாதேவி
நடித்த
**பெரிய இடத்துப்பெண்**

**REGAL—JAFFNA**
NOW SHOWING
GREGORY PECK
in
TO KILL A
MOCKING BIRD
(Winner of 3 Academy Awards)


இப்பத்திரிகை ஈழநாடு லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேலவீதி 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1966-ம் ஆண்டு ஜனவரி மாதம் 12-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org